
உள்ளம்
உன் வசமானதடி
உமா பாலகுமார்

உள்ளே

1. உள்ளம் உன்வசமானதடி! 5

2. உயிர் தொட்ட உறவே! 104

# உள்ளம் உன்வசமானதடி!



1

இரவும் பகலும் நட்புடன் கைகோர்க்கும் இனிய மாலை நேரம்!

தூரத்தே தெரிந்த மலைத் தொடர்களிலிருந்து, குளிர்ச்சியை சுமந்து வந்து நரம்புகளின் நலம் விசாரிக்க ஆரம்பித்திருந்தது - தாவியணைத்த தென்றல் காற்று.

யாரும் தொடாத ஒப்பந்தம் முடிந்து, மீதமிருந்த மலர்கள் மரங்களிலிருந்து உதிர்ந்து மண் தொட்டன.

முப்பது நாளும் விழித்திருக்க ஆசைப்பட்ட நிலவுப் பெண், வானில் உலாவர நேரம் பார்த்துக் காத்திருந்தாள்.

தேனிக்கு அருகிலிருந்த அந்த கிராமத்தில், சிவன் கோவில் மணியோசை ஓங்காரமாய் ஒலித்துக் கொண்டிருக்க, தன் மெல்லிய பாதங்களைப் பதித்து, பிரகாரத்தை அப்பிரதட்சணம் செய்து கொண்டிருந்தாள், மிருணாளினி!

பார்வை பூமியில் நிலைத்திருக்க, தன்னுடைய அக்கா மீனலோசனிக்கு நல்லபடியாகப் பிரசவம் நடந்து முடிய வேண்டுமென்ற மானசீக வேண்டுதல், அவள் மனதில்

விழிகள், சற்று தொலைவில் தெரிந்த அந்த வேட்டியணிந்த பாதங்களின் மீது சென்றதும், பதைப்புடன் உயர்ந்தன.

எதிரில், முகிலனும் அவளையே கூர்மையுடன் ஊடுருவிய படி கம்பீரமாக நடந்து வந்து கொண்டிருந்தான்.

அவன் விழிகளின் ஸ்பரிசத்தில், மனதிற்குள் மெலிதாய் ஒரு குளிர் பரவ, சட்டென்று விலகி நடக்க ஆரம்பித்தாள் மிருணாளினி.

கருமை கலந்த மாநிறத்தில், ஆறடி உயரத்தில், கருத்தடர்ந்த பெரிய மீசையுடனும், கூர்மையான விழிகளுடனும், தூய வெள்ளை வேட்டி சட்டையணிந்து அவன் கம்பீரமாக நடந்து வந்தால், அந்த கிராமமே பயப்படும்.

அந்த ஊரிலேயே பெரிய பணக்காரரும், ஊர்ப் பெரிய மனிதருமாகிய சுந்தர பாண்டியனின் ஒரே மகன்தான் முகிலன்!

'எம்.எஸ்ஸி' விவசாயம் படித்துவிட்டு, வயலையும் தோப்பையும் திராட்சைத் தோட்டங்களையும் தந்தையுடன் சேர்ந்து நிர்வகித்து வருபவன்!

அவன் மிகவும் கண்டிப்பானவன். சிறு தவறு செய்தால் கூடப் பொறுக்க மாட்டான். உடனே தண்டனை கொடுத்து விடுவான் என்பது, ஊர் அறிந்த உண்மை.

அவனுக்கு இன்னும் திருமணமாகவில்லை.

பெரிய இடங்களிலிருந்தெல்லாம் நிறைய வரன்கள் வந்தாலும், எதையுமே தன் மனதிற்குப் பிடித்ததாக இல்லை என்று மறுத்துக் கொண்டிருப்பவன்!

நேரில் பார்ப்பதற்கு மிகவும் முரட்டுத்தனமாக இருப்பதால், மிருணாளினிக்கு அவனைக் கண்டாலே ஒருவித பயம் எழும்... மனம் படபடக்கும்!



கோவிலில் அர்ச்சனையையும் வேண்டுதலையும் முடித்து விட்டு, மெதுவாக வீட்டிற்குத் திரும்பி வரும்போதுதான், வழியில் அவள் அந்தப் பைத்தியக்காரப் பெண்ணைப் பார்க்க நேர்ந்தது.

அவளருகே ஓடிவந்து கைநீட்டியபடி அந்தப் பெண் சிரித்ததும், மனதிற்குள் சிறு பயம் வந்தாலும், உடனே வாழைப் பழத்தை எடுத்து நீட்ட - வாங்கிக் கொண்டு ஓடினாள் அவள்.

கந்தல் உடையுடன், அங்குமிங்கும் ஊருக்குள் சுற்றித் திரிந்து கொண்டிருக்கும் அவளைப் பார்த்தால், மிருணாளினிக்குப் பரிதாபமாக இருக்கும்.

யாரையும் தொந்தரவு செய்யாமல், கொடுப்பதை வாங்கிச் சாப்பிட்டுவிட்டுப் பெரும்பாலும் கோவில் சத்திரத்தின் திண்ணையில் முடங்கிக் கிடக்கும் அவளை நினைத்துப் பெருமூச்சொன்று எழுந்தது.

மிருணாளினி வீட்டிற்குள் நுழைந்தபோது, பெரிய வீட்டிலிருந்து கணக்குப் பிள்ளையும், முகிலனின் தூரத்து உறவினரான கணபதியும் வந்திருந்தனர்.

''வாங்க!'' என்று பொதுவாக அவர்களை வரவேற்று விட்டுத் திரும்பியவளை ''நல்லாருக்கியாம்மா... கோவிலுக்குப் போயிருந்தியா... நல்ல சகுனம்தான்!'' என்றார் கணக்குப்பிள்ளை புன்னகையுடன்.

''ஆமாம் மாமா! அக்காவுக்காக வேண்டிக்கிட்டு வந்தேன்'' எனும்போதே, தேம்பாவனி காபியுடன் வர, பின் அறைக்குச் சென்றாள் அவள்.

நிறைமாத வயிற்றைப் பிடித்தபடி படுத்திருந்த மீனலோசினி, அவளைக் கண்டதும் எழுந்தாள்.

விபூதிப் பிரசாதத்தை அவளிடம் கொடுத்தவள், "என்னக்கா டயர்டா இருக்கா?" என்றபோது, "ஹூஹூம்... ரொம்ப சந்தோஷமா இருக்கு! உனக்கொரு குட் நியூஸ்... சுந்தர பாண்டி ஐயா வீட்டில் இருந்து, உன் ஜாதகத்தைக் கேட்டு அவங்க ரெண்டு பேரும் வந்திருக்காங்க. அவங்க பையன் முகிலனைக் கல்யாணம் செஞ்சிக்கிட்டு நீயாவது வசதியா சந்தோஷமா இருக்கணும், மிருணா" என்றாள் அவள்.

உடனே அதிர்ந்து போய் அவளருகில் அமர்ந்தாள்.

"கோவில்லே அவரைப் பார்த்தேன்... எனக்கு என்னமோ அவரைப் பார்த்தாலே பயமா இருக்கு!" மனம் சிறகாய் படபடக்க, பதைப்புடன் கூறினாள்.

"ஓ! பொண்ணும் மாப்பிள்ளையும் கோவில்லே வச்சே பார்த்துக்கிட்டாச்சா? எங்களுக்குத் தெரியாம என்னென்னவோ நடந்திருக்கு. இரு. நான் அப்பாகிட்டே சொல்றேன்" - சிறு கேலியிருந்தது அவள் குரலில்.

"ப்ளீஸ்... அக்கா... வேண்டாமே! நான் மேலே படிக்கணும். வேலைக்குப் போகணும்னு ஆசைப்படறேன். அதோட மாப்பிள்ளை, மாமா மாதிரி அமைதியா சாதுவா இருந்தாலாவது பரவாயில்லை! பெரிய மீசையும் முரட்டு உருவமுமா - பாக்கவே பயமா இருக்கு! கனவில வந்தாக்கூட, தூக்கம் வராது போலிருக்கு!" என்றாள் மிரட்சியுடன்.

"முரட்டுத்தனமா இருந்தா கெட்டவங்கன்னோ, பார்க்க சாதுவாத் தெரிஞ்சா நல்லவங்கன்னோ அர்த்தமில்லை மிருணா! மனுஷங்களோட உருவத்தை வச்சு குணத்தை எடைபோட முடியாது. உனக்குச் சீக்கிரமே ஒரு நல்ல வாழ்க்கை அமையணும்னு நான் வேண்டிட்டிருக்கேன்." மீனா ஒரு பெருமூச்சுடன் கூறினாள்.



"என்க்கா! மாமாதான் ரொம்ப நல்லவராச்சே. உன் அதிர்ஷ்டம், உனக்கு நல்ல கணவராக் கிடைச்சிருக்காரு" என்றபோது, மீனாவிடமிருந்து சிறு புன்னகையே பதிலாய்!

அப்போது அறைக்குள் வந்தார் தேம்பாவனி.

"என்ன... வந்தவுடனே அவகிட்ட எல்லாம் சொல்லி முடிச்சாச்சா... என்ன சொல்றா உன் தங்கச்சி...?" என்றார் ஆர்வத்துடன்.

"நீங்களே கேளுங்க... அவளுக்கு மாப்பிள்ளையைப் பிடிக்கலையாம். படிக்கணுமாம். இப்பக் கல்யாணம் வேணாம்னு சொல்றா!"

"எந்தப் பொண்ணுதான் கல்யாணம் பண்ணிக்கிறேன்னு சொல்லுவா. நீ கூடத்தான் மாட்டேன்னு அழுதே! இப்ப..." சட்டென்று நிறுத்தினார் அவர்.

கணக்குப் பிள்ளையையும், கணபதியையும் அனுப்பி விட்டு உள்ளே வந்த சொக்கலிங்கம்,

"மிருணா... கணபதி, ஜாதகம் கொடுத்துட்டுப் போனாரு. உன் ஜாதகத்தையும் கொடுத்து அனுப்பி இருக்கேன். எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு. அவங்க நல்ல மனுஷங்க! இந்த இடம் அமைஞ்சதுன்னா, நமக்குப் பெரிய அதிர்ஷ்டம்னுதான் சொல்லணும்." ஆர்வத்துடன் கூறினார்.

சொக்கலிங்கம், அந்த ஊரில் போஸ்ட் மாஸ்டராகப் பணி புரிபவர்! சொந்தமாக வீடும், நிலங்களும் இருப்பதால், ஓரளவுக்கு வசதியாகவே, - முதல் பெண்ணின் திருமணத்தை போன வருடம் நடத்தி முடித்திருந்தார்.

யோசனையுடனிருந்த இளைய மகளைப் பார்த்தவர், "என்னம்மா... பதிலே வரலை?" என்று கேட்கவும், "அவளுக்கு மேலே படிக்கணுமாம்!" என்றாள் தேம்பாவனி.

"படிக்கிறதும் அவ்வளவுதானே? அவங்கிட்டே சொல்லுவோம்... ஒத்துக்கிட்டாங்கன்னா கரஸ்பாண்டன்ஸ் கோர்ஸில படிக்கட்டும். வாழ்க்கையில, அதிர்ஷ்டம்கிறது எப்பவாவதுதான் கதவைத் தட்டும் மிருணா. அது வரப்பவே பயன்படுத்திக்கணும்'' என்றார் முடிவாக.

ஆனால், அவள் மனம் ஏனோ சமாதானமடைய மறுத்தது.

அவனுடைய பெரிய மீசையும், முரட்டுத்தனமான உருவமும், கூர்மையான விழிகளும் மீண்டும் மீண்டும் நினைவிற்கு வந்து, மனதின் உள்ளே ஒருவித விதிர்ப்பை ஏற்படுத்தின.

* * *

கல்லூரிக்குச் சென்று திரும்பி வரும்போது நல்ல மழை பொழிய ஆரம்பித்தது.

மேகத்தூரிகை கொண்டு வானம், மழை ஓவியத்தை பூமியில் வரைய ஆரம்பிக்க, மரங்களும், மலர்களும் அதற்கு வண்ணம் சேர்த்தன.

மழை என்றால் மிருணாவுக்கு மிகவும் பிடிக்கும் என்பதால் கையிலிருந்த புத்தகங்களை எல்லாம் ஹேண்ட் பேக்கினுள் வைத்தாள்.

குடையையும் விரிக்காமல் முகத்தில் பன்னீர் சிதறல் களாய் மழைத்துளிகளை ஏந்தி ரசித்தபோதுதான், கார் ஹாரனின் ஒலி அவளை உசுப்பியது.

யாரோ தவத்தைக் கலைத்துவிட்ட ரிஷியைப் போல் கோபத்துடன் திரும்பியவளின் பார்வை, அந்தக் காரிலிருந்து குடையுடன் இறங்கிய முகிலனைக் கண்டதும், ஒரு கணம் தம்பித்துப் போனது.



கொடி போன்ற உடலுடன், தந்தச் சிற்பம் போல் உயரமாக, கறுப்பு வைரமாய் ஒளிரும் விழிகளுடன், அழகின் மொத்த உருவமாய் நின்றிருந்தவளை ரசித்தபடி, வேகமாக, அவளருகில் வந்தான்.

"ஏன் இப்படி மழையில நனைஞ்சிட்டு நிக்கறே... காய்ச்சல் வந்தா என்ன செய்யறது?'' ஆழ்ந்த குரலில், சிறு கோபத்துடன் கேட்டான்.

'நீ எதுவும் செய்ய வேண்டாம்...'

உதடு வரை வந்த வார்த்தைகளை மறைத்து, பதிலேதும் கூறாமல் அவன் தந்த குடையையும் மறுத்து, தன்னிடமிருந்த குடையை எடுத்து விரித்தாள் மிருணா.

கண்களில் குறுகுறுப்புடன் அவளையே கூர்ந்தவனின் விழிகளில், சிறு ஆச்சர்ய மின்னல்!

''உனக்கும் மழைன்னா பிடிக்குமா?''

மிருதுவாகக் கேட்டவனை, நம்ப இயலாத வியப்புடன் பார்த்தவள், மெலிதான தலையசைப்புடன் விலகி வேகமாக நடக்க ஆரம்பித்தாள்.

ஒரு நிமிடம் ரசனையுடன் நின்று அவளையே அளவிட்டவன், பிறகு காரில் ஏறியபோது, முன்பு கல்லூரி நாட்களில் மழை தன்னுடன் நெருங்கிய தோழமை அமைத்திருந்த ஞாபகம்!

உதடுகளில் உறைந்த புன்னகையுடன் வீட்டிற்குச் சென்றவனை, விடாமல் தொடர்ந்தன - வியப்பினால் விரிந்த மிருணாவின் அழகு விழிகள்!

அவள் வேகமாய்ச் சென்று வீட்டினுள் நுழைந்தபோது, அப்பா மிகவும் மகிழ்ச்சியுடன் இருப்பது தெரிந்தது.

"மிருணா... ஏன் இப்படி நனைஞ்சிருக்கே... குடை எடுத்துப் போகலை?" வாஞ்சையுடன் கேட்டபடி அருகில் வந்தவர், உட்புறம் திரும்பினார்.

"வனி... ஒரு துண்டு எடுத்துட்டு வா!" என்று குரல் கொடுத்தார்.

அம்மா அவளைத் திட்டிக்கொண்டே, தலை துவட்டிவிட, "சும்மா இரு... கல்யாணமாகி நம்ம வீட்டை விட்டு இன்னும் கொஞ்ச நாளிலே புகுந்த வீட்டுக்குப் போகப் போறா... அவளை ஒண்ணும் சொல்லாதே!" என்று அதட்டினார் லிங்கம்.

மனதிற்குள் சட்டென்று ஒருவித கலக்கம் வந்து மையம் கொள்ள, மிருணாவின் விழிகள் கேள்வியாய் உயர்ந்தன.

"அப்பா..." - அவள் மெதுவாக ஆரம்பிப்பதற்குள் "இன்னிக்கு நல்ல நாளா இருக்கேன்னு, ரெண்டு பேருமே ாதகப் பொருத்தம் பார்த்துட்டோம்மா. ரொம்ப அம்சமா பொருந்தி இருக்குன்னு. இப்பத்தான் கணபதி வந்து சொல் லிட்டுப் போறாரு! நீ படிக்கணும்னு சொன்னதை, நான் வர்கிட்ட சொல்லிட்டேன். பெரியவர்கிட்ட சொல்லிடறேன் ாரு!" என்றார்.

தன்னைச் சுற்றிலும் நடக்கின்ற காரியங்கள் எல்லாம், காற் ன் வேகத்தில் செல்வதை அறிந்த மிருணா, மௌனமானாள்.

அப்பாவை எதிர்க்கவும், தைரியமில்லை. அம்மாவிடம் ால்லவும் பயம்! தன் மன உணர்வுகளை, மீனாவிடம் டுமே பகிர்ந்து கொண்டாள்.



ஆனால் அவள், "அப்பா அம்மா உனக்கு நல்லதுதான் செய்வாங்க மிருணா! அதோட இந்தக் கல்யாண ஏற்பாடு உன் வாழ்க்கைக்கு எவ்வளவு பாதுகாப்பு தெரியுமா? பெரியவங்க பாத்துச் செய்யற எல்லாமே தப்பாயிடறதில்லை. நல்லதாவும் அமையும்!" - என்றாள் அழுத்தமான குரலில்.

"எப்படி? உன்னோட வாழ்க்கை மாதிரியா? மாமா அளவுக்கு யாரும் வர முடியாதுக்கா... அவர் ரொம்ப நல்லவர்!"

"ஆமாமாம்... உங்க மாமா மாதிரி, அந்த முகிலனால நிச்சயம் இருக்க முடியாதுதான்!"

அவள் வார்த்தைகளில் சிறு விரக்தி இழையோடியது.

"சரி! நீங்க ரெண்டு பேரும் குழந்தைக்கு என்ன பெயர் செலக்ட் பண்ணி இருக்கீங்க?"

அவள் ஆவலுடன் கேட்க, "உன் மாமாவுக்கு அதுக்கெல்லாம் ஏது நேரம்?" சிறு அலுப்புடன் கூறினாள் மீனா.

"ஏன்க்கா... வர வர ரொம்ப விரக்தியாப் பேசறே? மாமாவுக்கும் உனக்கும் நடுவில ஏதாவது பிரச்னையா?"

"சேச்சே... அதெல்லாம் இல்லை! குழந்தைக்கு நீயே பெயர் செலக்ட் பண்ணிச் சொல்லேன்."

"ம்... நான் முன்னாடியே யோசிச்சி வச்சிட்டேன். ஆண் குழந்தையா இருந்தா 'ஹர்ஷவர்தன்!' பெண்ணா இருந்தா 'ஹம்சத்வனி!' ஓகேயா...? சிரிக்கா!" மிருணா புன்னகையுடன் கேட்க மீனா நிறைவுடன் தலையசைத்தாள்.

'புன்னகை' மிகப் பெரிய சமாதானத் தூதுவன்!

பலரையும், அவர்களை அறியாமலே சாய்த்து விடுகின்ற வல்லமை படைத்த அந்த பலமான ஆயுதம், இப்போது, சுலபமாக மீனாவையும் வசப்படுத்திக் கொண்டது.



2

மறுநாள் காலையில் மிருணா கல்லூரிக்குக் கிளம்பிச் செல்லும் போது, சைக்கிள் ரிப்பேர் என்று உடன் படிக்கும் பங்கஜமும் அவளுடன் வந்தாள். இருவரும் பேசிக் கொண்டே நடந்தால் - ஊர் எல்லையில் முகிலனின் காரைக் காண நேர்ந்தது.

அங்கிருக்கும் பெரிய அரசமர மேடையில், அந்தப் பைத்தியக்காரப் பெண் அலங்கோலமாகப் படுத்திருப்பதும், கார் டிரைவர் அவளருகில் சென்று ஒரு சால்வையைப் போர்த்திக் கொண்டிருப்பதும் தெரிந்தது.

அவர்கள் அந்தக் காரைக் கடக்கும்போது, "அது நல்லாத் தூங்கிட்டிருக்கு சின்னய்யா! முழுசாப் போர்த்தி விட்டுட்டேன்" டிரைவர், பின்புறம் அமர்ந்திருந்த முகிலனிடம் கூறினார்.

ஓரக்கண்ணால் அவனையே ஒரு நொடி கவனித்து விட்டு அவள் வேகமாக முன்னே சென்ற அடுத்த நொடி, அந்தக் கார் அவர்களைத் தாண்டிச் சென்றது.

ஏனோ, அன்று முழுவதும் அவள் மனம் அலைபாய்ந்து கொண்டே இருந்தது. அவனுடைய முரட்டுத்தனத்திற்கும், அந்த இரக்க குணத்திற்கும் இடையே, ஏதோ ஒன்று முரண்படுவதைப் போல்!

மாலையில் வீட்டிற்கு வந்தவுடனே, அம்மா அவள் வாயில் சர்க்கரையை அள்ளிக் கொட்டினார்.

"நீ ரொம்பக் குடுத்து வச்சவடி! ஜாதகம் பொருந்தி, அந்தப் பையனுக்கும் உன்னைப் பிடிச்சிட்டதாலே, அவங்களுக்கு முழு சம்மதம்! ஒரு சம்பிரதாயத்துக்காக, அடுத்த ஞாயிற்றுக் கிழமை உன்னைப் பொண்ணு பாக்க வராங்களாம். அன்



னிக்கே பேசி முடிச்சி, தேதி குறிச்சிடலாம்னு சொல்லியனுப்பினாங்க" - உற்சாகத்துடன் கூறினார்.

"ஏம்மா... இப்படி என்னைப் புரிஞ்சிக்காம..." எனும் போதே, மீனாவின் கணவன் தங்கவேலு அவசரமாக உள்ளே வந்தான்.

"வாங்க மாப்பிள்ளை..." என்று தேம்பாவனி வரவேற்றார்.

"என்னத்தை...? வீட்டு மாப்பிள்ளைக்கே தெரியாம, என்னென்னவோ காரியமெல்லாம் இந்த வீட்டுல நடக்குது" என்றான் கோபக் குரலில்.

"உக்காருங்க மாப்பிள்ளை... நான் டிபன் காபி எடுத்துட்டு வரேன். நம்ம மிருணா கல்யாண விஷயத்தைப் பத்திச் சொல்றீங்களா? முந்தா நாள்தான் ஜாதகம் கொடுத்தோம். உடனே பாத்துப் 'பொருந்தி இருக்கு, பேசி முடிக்கலா'மின்னு இன்னிக்குத்தான் அவங்க வீட்டிலயிருந்து வந்து சொன்னாங்க. உடனே இவங்கப்பா உங்களைப் பாத்து சொல்லணும்னு, பள்ளிக் கூடத்துக்கு வந்தாங்களே தம்பி."

"ஆமாம்... இப்பத்தான் மாமா வந்து சொல்லிட்டுப் போனாரு. ஏன் அத்தை... நீங்களாவது சொல்றதில்லையா? நம்ம வசதிக்கு, என்னை மாதிரி ஒரு ஸ்கூல் டீச்சர்... இல்லை, வேற ஏதாவது ஒரு உத்தியோகத்துல இருக்கிற மாப்பிள்ளைதான் சரி! இப்படி ஒரு பட்டிக்காட்டுப் பண்ணை யாருக்கு நிச்சயம் பண்ணப் போறதாச் சொல்றீங்க?

"ஏன் மிருணா... இதுக்கு நீயும் ஒத்துக்கிட்டியா?" - என்று அவளிடம் திரும்பிக் கேட்டான்.

உடனே, "நான் வேண்டாம்னுதான் சொல்றேன் மாமா! எனக்கு அவரைப் பார்த்தாலே சத்தமாப் பிடிக்கலை...

உங்களை மாதிரி பாக்க சாதுவா, அமைதியா, நல்லவரா இருந்தாக் கூடப் பரவாயில்லை. இவங்க யாருமே கேக்க மாட்டேங்கிறாங்க!'' என்றாள், தனக்கென்று பேச ஒருவர் கிடைத்த சலுகை உணர்வுடன்!

திடீரென்று, மீனாவின் கோபக்குரல் அவளை இடை மறித்தது.

''நீ உள்ளே போ... மிருணா. பெத்தவங்க உன் நல்லதுக்குத்தான் எதுவுமே செய்வாங்க.'' - இதுவரை பார்த்திராத ஒரு ரௌத்ரம், அவள் விழிகளில்!

''மீனா! ஏன் இப்படி அவளைக் கோச்சுக்கறே...?'' என்றபடி அவளருகில் சென்றவளிடம், ''நீங்க இதிலே தலையிடாதீங்க. அப்பா அவளுக்கு நல்லதுதான் செய்வாரு!'' என்று கூறிவிட்டு, வேகமாக உள்ளே சென்றாள் அவள்.

தங்கவேலுவும் அவளைத் தொடர்ந்து செல்ல, என்ன செய்வதென்று புரியாமல் நின்ற மிருணா, கொல்லைப்புறம் சென்று துணி துவைக்கின்ற கல் மேடையில் அமர்ந்து யோசித்தாள்.

தனக்கென்று பேச இங்கு ஒருவருமே இல்லை என்று தோன்றி, மனம் சோக மூட்டமானது.

அங்கு, இரவில் பெய்த மழையின் துளிகள், பூமியில் சிறு குட்டைகளாகத் தேங்கியிருந்தன.

அவள், தோட்டத்து மலர்களிடம் சென்று மௌனமாய்ப் பார்வையிட்டாள்.

பறித்தவுடன் வாடிவிடுகின்ற பூக்களைப் பார்க்கும்போது, இப்போதெல்லாம் பூப்பறிக்கவே மனம் வருவதில்லை.

இன்று, ஏனோ அவள் மனம் மிகவும் சோகமாய்...



பூக்களை யாசித்தபோது, வாழ்க்கை... பாறைகளை எறிந்தது போல் இதயத்திற்குள் வலித்தது.

* * *

அடுத்த வாரக் கடைசியில், பெண் பார்க்கவென்று முகிலனின் குடும்பத்தினர் வரப்போவதை அறிந்ததிலிருந்து, மிருணாவின் மனத்திற்குள் புதுவிதமான ஒரு அலைப்புறுதல் தெரிந்தது.

உள்ளே ஒருவித இறுக்கம் நிறைந்திருக்க, இதயம் மட்டும் எதிலும் ஒட்டாமல் தாமரை இலைத் தண்ணீராய் தனித்திருந்தது.

மறுவாரத்தில் ஒரு நாள், மாலை நேரத்தில் மீனாவிற்குப் பிரசவ வலி எடுத்து விட்டது.

உடனே காரை வரவழைத்து மீனாவை அழைத்துக் கொண்டு அம்மாவும் அப்பாவும் டவுனிலிருக்கும் மருத்துவமனைக்குக் கிளம்ப - தங்கவேலுவின் பள்ளிக்கு ஃபோன் செய்தாள் மிருணா.

ஆனால் அவன் விடுமுறை என்று தெரிந்தது.

தங்கவேலுவிடம் அவளையே சொல்லி விடும்படிக் கூறிய லிங்கம், பக்கத்து வீட்டு அப்பத்தாவைத் துணைக்கு வைத்து விட்டுப் பிறகு கிளம்பினார்.

உடனே மீனாவின் வீட்டிற்குச் சென்றாள் அவள்.

பலமுறை அழைத்தும் பதிலில்லாமல் போக, வாசல் கதவைத் தள்ளியபோது அது திறந்து கொண்டது.

அவனை எங்கும் காணாததால் பின்புறம் சென்றாள் மிருணா.

பின்புறத் தாழ்வாரத்திற்குச் செல்லும்போதே ஏதோ புரியாத சப்தங்கள் கேட்டன.

மெதுவாக எட்டிப் பார்த்தபோது, அங்கு கண்ட காட்சி அவள் நெஞ்சையே உலுக்கிப் போட்டது.

ஆடைகள் கலைந்து, பார்க்கக் கூடாத ஒரு கோலத்தில் அந்தப் பைத்தியத்தை அணைத்தபடித் தரையில் படுத்திருந்தான் தங்கவேலு.

மனம் பதறித் துடிக்க அவள் வேகமாக வெளியே வந்தாள்.

எப்படி நடந்தோமென்றே புரியாமல் வீட்டிற்கு வந்து சேர்ந்தபோது, மனமோ வெடித்துவிடும் போல்!

கண்கள் சிவந்து, முகம் வெளுத்து, இதயம் படபடக்க, தங்கவேலுவின் சுயரூபத்தை அறிந்து கொண்ட வலி முட்களாய் மனதில் நிறைந்தன.

விழியோரங்களில் கண்ணீர்த் துளிகள் ஜனித்தன.

போயும் போயும், தன் நினைவில்லாத ஒரு பைத்தியக்காரப் பெண்ணிடம் தன் ஆண்மையை நிரூபிக்கும் அவனை நினைத்தால், அடிவயிறுவரை கசந்தது.

மீனாவின் மறைமுகப் பேச்சுக்களுக்கும், விரக்திப் புன்னகைக்கும் அர்த்தம் புரிந்தது.

உள்ளம் நொறுங்கிப் போயிருந்தது.

நெஞ்சக் கூட்டுக்குள் பயப்பறவை சிறகடிக்க - வீட்டிற்குள் வந்தவள், தன் அறைக்குள் சென்று முகம் மூடி அழ ஆரம்பித்தாள்.

வெகு நேரம் கழித்து, தன்னை சமாதானப்படுத்திக் கொண்டு எழுந்தாள்.



முகம் கழுவி முன்னறைக்கு வந்தபோது, வெற்றிலை பாக்கை இடித்தபடி பக்கத்து வீட்டு அப்பத்தா டி.வி.யில் ஆழ்ந்திருந்தார்.

மீனாவைப் பற்றிய தகவலேதும் தெரியவில்லை.

அவளுடைய சோக வாழ்க்கையை எண்ணியபடி வேதனையுடன் அமர்ந்திருந்தபோது, வாசலில் அழைப்பு மணி ஒலித்தது.

கதவைத் திறந்தால், புது மாப்பிள்ளை போல் குளித்து உடை உடுத்தி அங்கு தங்கவேலு நின்றிருந்தான்.

இன்று அவனுடைய சிரிப்பே வித்தியாசமாய் - மன விகாரம் மிகுந்த ஒரு ஓநாயின் சிரிப்பாய் மனதில் பதிய, அவனையே வெறித்தபடி நின்றிருந்தாள் மிருணா!

''என்ன மிருணா... அப்படிப் பாக்கறே? வாங்கன்னு கூப்பிட மாட்டியா?'' வழிசலாகக் கேட்டபடி, உள்ளே வர முயன்றவனைத் தடுத்தாள் அவள்.

''அப்பா உங்களை உடனே டவுன் ஹாஸ்பிடலுக்கு வரச் சொன்னாங்க. அக்காவுக்கு வலி எடுத்துக் காரில் அழைச்சிட்டுப் போயி ரெண்டு மணி நேரமாச்சு.''

முகம் உடனே மாறிவிட, ''ஏன்... எனக்கு உடனே சொல்லணும்னு உங்கப்பாவுக்குத் தோணலையா?'' கோபத்துடன் கேட்டான் அவன்.

''உங்களுக்கு ஸ்கூலுக்கு ஃபோன் பண்ணினோம். நீங்க லீவுன்னு சொன்னாங்க. உங்ககிட்டச் சொல்லச் சொல்லிட்டு அவங்க அவசரமாகக் கிளம்பிட்டாங்க. நான்தான் உங்களைத் தேடி வீட்டுக்கு வந்தேன். அங்கே...'' மெதுவாக அவள் நிறுத்தினாள்.

அவன் பார்வை படபடப்புடன் உயர, மெலிதாய் வியர்த்துப் போனது.

படபடப்புடன் "நீ வீட்டுக்கு வந்தியா?" - என்று அவசரமாகக் கேட்டான்.

"ஆமாம்... ஆனா நீங்க இல்லை போலிருக்கு. அந்தப் பைத்தியம் தான் எதிர்லே வந்தது. வீட்டுக் கதவைத் தட்டிப் பார்த்துட்டு வந்துட்டேன்." அழுத்தமாகக் கூறினாள்.

சன்னமான அதிர்ச்சியுடன், "ஆமாம்... மிச்சமிருந்த சாப்பாட்டைப் போட்டு அனுப்பிட்டு குளிக்கப் போயிருந்தேன்... சரி நான் உடனே போய் மீனாவைப் பாக்கறேன்." கூறிவிட்டு அவன் வேகமாய்த் திரும்பிச் செல்ல, முதன் முதலாக அவன் மேல் பெரும் வெறுப்பும், கோபமும் எழுந்தன.

ஆனால், அன்றிரவு முழுவதும் வலி எடுத்து மீனாவிற்கு அதிகாலையில் பிறந்தது ஒரு பெண் குழந்தை.

ஈனப் பிறவியான தந்தையின் முகத்தையும், பாவப்பட்ட பெண்ணாகிய தன் தாயின் முகத்தையும் பார்க்க விருப்பமின்றி அந்த மழலை இறந்தே பிறந்துவிட, அவர்களின் வீடே சோகமயமானது.

எல்லாக் காரியங்களும் முடிந்து விட்டாலும், அந்த வீட்டின் ஒவ்வொரு மூலையிலும் மெல்லிய சோகம் குடிபுகுந்திருந்தது.

புத்திர சோகத்தில் துவண்டிருந்த மீனாவைப் பார்த்தால் நெஞ்சை அடைத்தது, மிருணாளினிக்கு!

சொக்கலிங்கமும் உடைந்து போயிருந்ததால் எல்லாக் காரியங்களையும் கணபதியே முன்னின்று பார்த்துக் கொண்டார்.



வீட்டில் துக்கம் நிகழ்ந்திருந்ததால் பெண் பார்க்கும் படலத்தை நிறுத்திய சுந்தரபாண்டியன், முகிலனின் போட்டோவை மட்டும் சம்பிரதாயத்துக்கென்று அனுப்பியிருந்தார்.

இரண்டு மாதங்கள் கழித்து அவளுக்குப் பரீட்சை முடிந்ததும், திருமணத்தை பேசி முடித்துக் கொள்ளலாமென்று லிங்கத்திடம் ஃபோனில் கூறினார்.

ஒரு வாரம் விடுமுறை எடுத்துக் கொண்டு வீட்டிலிருந்த மிருணா, அக்காவை சிறு குழந்தை போல் கவனித்துக் கொண்டாள்.

தங்கவேலுவைப் பற்றி வெளியில் கூறவும் முடியாமல், மனதிற்குள்ளேயே வைத்துப் புழுங்க, பல வேதனைகள் அவளை ஆக்ரமித்து வாட்டின.

ஒரு வாரம் கழித்து, அவள் கல்லூரிக்குச் செல்ல ஆரம்பித்தாள்.

சிறு மழலையின் வரவு மறுக்கப்பட்ட சோகமும், தங்கவேலுவின் செய்கையும் சேர்ந்து, நம்பிக்கை என்ற ஒன்றே அவள் மனதில் வறண்டு போயிருந்தது.

அன்று மாலை கல்லூரியிலிருந்து வெளியே வந்தபோது, பேருந்துகள் வேலை நிறுத்தம் செய்திருந்தன.

அவள் குழம்பிப்போய் நின்றிருக்க, முகிலனின் கார் அவளருகே வந்து நின்றது.

அதிலிருந்து இறங்கி வந்த டிரைவர், "வாங்கம்மா... நான் உங்களை வீட்டிலே விட்டுடறேன். சின்னய்யாதான் கார் அனுப்பினாங்க. பஸ் ஸ்டிரைக்குன்னு தெரிஞ்சதாம்... அதான்!" என்றார் பவ்யமாக.

"இல்லீங்க... நான் ஏதாவது ஆட்டோ கிடைக்குதான்னு பாத்துப் போயிடறேன். உங்களுக்கு எதுக்கு வீண் சிரமம்?"

"சிரமம் ஏதும் இல்லைம்மா! உங்களை அழைச்சிட்டுப் போயி வீட்டில விடலைன்னாதான், ஐயா திட்டுவாங்க. ஏறுங்க!" என்று பின் கதவைத் திறந்துவிட, அவள் மெல்ல ஏறிக் கொண்டாள்.



3

**கா**ரில் வந்து வீட்டு வாசலில் இறங்கியவளை, அந்தத் தெருவே வியப்புடன் கவனிக்க, தர்மசங்கடத்துடன் உள்ளே வந்தாள் மிருணாளினி.

"நீ ஏன் அவங்க காரிலே வந்தே? ஒரு ஃபோன் பண்ணியிருந்தா நான் வந்து உன்னை அழைச்சிட்டு வந்திருப்பேன் இல்லை?"

சினத்துடன் கேட்டபடி வாசலுக்கு வந்த தங்கவேலுவை சிறு கோபத்துடன் ஏறிட்டவள், பதிலொன்றும் கூறாமல் வேகமாக உள்ளே சென்றாள்.

டிரைவர் காசி, உள்ளே வந்து லிங்கத்திடம் விபரத்தைக் கூறிச் செல்ல, தங்கவேலுவின் முகம் சுருங்கியது.

தொடர்ந்து வந்த நாட்கள், சோகங்களையும், வேதனைகளையும் மெல்ல மெல்லத் தன்னுடன் எடுத்துச் செல்ல, வீடு மெதுவாக இயல்பு நிலைக்குத் திரும்ப ஆரம்பித்திருந்தது.

✱ ✱ ✱

**மி**ருணாவிற்குத் தேர்வுகள் நெருங்கிக் கொண்டிருந்தன. கடைசிநாள் பரிட்சை முடிந்து, கனத்த இதயத்துடன் அவள் வீட்டிற்கு வந்த போதுதான், பெரியவர் சுந்தர பாண்



டியனும், அவர் மனைவி தமிழரசியும் அங்கு வந்திருப்பது தெரிந்தது.

அவள் அவர்களை வரவேற்று வணங்கிவிட்டு உள்ளே சென்றாள்.

திருமணத்திற்குத் தேதி குறிக்கவும், அதைப்பற்றிக் கலந்து முடிவெடுக்கவும், அவர்கள் வந்திருப்பதாக மீனா கூறினாள்.

முகிலனைக் கணவனாக ஒப்புக்கொள்ள மனம் மறுத்தாலும், குடும்பத்தின் நிம்மதிக்காகவும், மகிழ்ச்சிக்காகவும், அமைதியாக இருந்தாள் அவள்.

இன்று அனைவரும் உடைந்து போயிருக்கின்ற நிலையில், தன்னால் அவர்களுக்கு இந்தக் கல்யாணத்தின் மூலம் சிறு சந்தோஷத்தையாவது தர முடிந்தால் அதுவே போதுமென்று தோன்றியது.

ஆனால், திருமணத்திற்கான வேலைகள் வேகமாக நடக்க ஆரம்பித்தபோது, அவளறியாமல் அடிவயிற்றில் ஆயிரம் பயத்தும்பிகள் சிறகடிக்க ஆரம்பித்தன.

ஒரு வேலையிலிருக்கும் தங்கவேலுவே பெண்கள் விஷயத்தில் இப்படியென்றால், பெரிய பண்ணையாரின் மகன் எப்படியிருப்பானோ என்ற ஒருவித பயம் நெஞ்சிற்குள் எட்டிப் பார்த்து, அவளை அலைக்கழிப்பதாய்!

சொக்கலிங்கத்தின் சோகம் புரிந்து, திருமணம் சம்பந்தப்பட்ட வேலைகளை எல்லாம் முகிலனுடைய வீட்டினரே ஏற்றுச் செய்தனர்.

சீர், நகைகள் மற்ற விஷயங்களை, அவரால் முடிந்த அளவு செய்யும்படிக் கூறிவிட்டார்கள்.

திருமண நாள் நெருங்க நெருங்க மிருணாவை ஒருவித பதட்டம் தொற்றிக் கொண்டது.

எதிலும் பிடிப்பின்றி இருந்தாலும், தங்கையின் திருமணம் மீனாவின் மனதை மாற்றி, சிறு உற்சாகத்தை மீட்டுத் தந்திருந்தது.

* * *

அன்று, மணமேடையில் முகிலனுக்கு அருகில் அமர்ந்து, அவன் அணிவித்த திருமாங்கல்யத்தை ஏற்றுக்கொண்ட போதும், வண்ணக் கனவுகள் எதுவும் தீண்டாத மௌனத்தின் பிடியில் உறைந்திருந்தாள் அவள்.

முதலிரவுக்கான சடங்குகள் முடிந்தன.

பளிங்குச் சிற்பமாய் பூமிக்கும் வலிக்காமல் மென்மையாகப் பாதம் பதித்து மிருணாளினி அவனுடைய அறைக்குள் வந்தபோது, முகிலனுக்கோ அவளுடைய கால் தடங்கள் ஓவியங்களாய்!

ஒரு பூஞ்சோலையே புடவையணிந்து எதிரே வந்ததைப் போல் ஒரு சிலிர்ப்பு அவனுக்குள்!

விழிகள் அவளை விட்டு அகல மனமின்றி குறுகுறுப்புடன் அவளையே அளவிட்டன.

மெல்ல நிமிர்ந்த மிருணாவிற்கோ அவன் பார்வை, பெரும் மிரட்சியை வரவழைப்பதாய்!

அவளை விட்டு நொடியும் விலகாத, 'என் உரிமை நீ' என்ற ஆளுமையுடன் அவளைச் சிறைப்படுத்திய பார்வை, மனதை குலுங்கச் செய்தது.

அவள் சட்டென்று விழிகளைத் தழைக்க, ஒரு நொடி அவற்றில் பிரதிபலித்த பயமும் மிரட்சியும் முகிலனிடம் பெரும் யோசனையை வரவழைத்தன.



மெதுவாக அவளருகில் சென்றவன், "வா... வந்து உக்காரு" என்றான் மிருதுவான குரலில்.

அவள் தயக்கத்துடன் வந்து கட்டிலின் ஓரத்தில் அமர்ந்தாள்.

''பாத்து... கீழே விழுந்துடப் போறே!'' என்றபடி, சிறு நடுக்கம் இழையோடிய அவளுடைய விரல்களிலிருந்து பால் சொம்பை வாங்கி, அருகிலிருந்த டீப்பாயில் வைத்தான் அவன்.

"என்ன... மேல படிக்கணும்னு சொன்னியாமே? எம்.எஸ்ஸி கெமிஸ்ட்ரிதானே... கரஸ்பாண்டன்ஸ் கோர்ஸ்ல படிக்கலாம். ஏன்... என்னை நிமிர்ந்து பாக்க மாட்டியா? வெக்கமா...?''

அவன் மென்மையாகக் கேட்க - மிருணா இல்லையெனத் தலையசைத்தாள்.

''பின்னே...?'' அவன் கேட்டவுடனே நிமிர்ந்தவளின் விழிகள் கண்ணீரை சுமந்திருந்தன.

''எனக்கு இதெல்லாம் பிடிக்கலை... பயமா இருக்கு!'' என்றபோது மனதில் இனம் புரியாத ஒரு வலியெழத் துடித்துப் போனான் முகிலன்.

யோசனையுடன், ''மிருணி... நான் உன்னை எந்த விஷயத்துலயும் ஃபோர்ஸ் பண்ண மாட்டேன். இதை உன்னோட வீடா நினைச்சிக்க... எதுவா இருந்தாலும் என்கிட்டே நீ தைரியமாக் கேக்கலாம்'' ஆழ்ந்த குரலில் கூறினான்.

அதற்கும் அவளிடமிருந்து பதில் வராமல் போனது.

''சரி... நீ ரொம்ப டயர்டா இருப்பே... காலையிலிருந்து சடங்கு அது இதுன்னு ரொம்ப அலைக்கழிச்சட்

டாங்க இல்லை? நீ படுத்துத் தூங்கு'' என்றவுடனே சட்டென்று நிமிர்ந்து பார்த்தாள்.

இந்த மென்மையான அணுகுமுறையை அவனிடமிருந்து தான் எதிர்பார்க்கவில்லை என்பதை அவளுடைய வியந்த விழிகள் கூறின.

''தேங்க்ஸ்!'' என்றபடி கட்டிலின் ஓரத்தில் தன்னைக் குறுக்கிக் கொண்டு அவள் படுத்துக் கொண்டாள்.

மனதிற்குள் பெரும் ஏமாற்றம் வந்தாலும், 'அவள் சிறு பெண்தானே.. மெதுவாகத்தான் அவளை மாற்ற வேண்டும்' என்ற எண்ணம் வந்தது முகிலனுக்கு!

இருவருக்கும் நடுவில் சீனச்சுவராய் உணர்வுகள் எழும்ப, கட்டிலின் மறுபக்கம் படுத்து ஒரு பெருமூச்சுடன் கண் மூடினான் முகிலன்.

உறக்கம் வராத அந்த இரவில், மனதிற்குள் பெரும் சலசலப்பாய், எண்ணங்களின் அலையடிப்புகள்.

* * *

மறுநாள் அவளுடைய வீட்டிலேயே வரவேற்பு நிகழ்ச்சி நடந்தது.

எல்லோரும் மகிழ்ச்சியுடன் கலந்து கொண்டாலும், தங்கவேலு மட்டும் வன்மத்துடன் இருந்தான்.

அவன் கணக்கு வேறாக இருக்க, தங்கச்சிலையாக இருந்த மைத்துனியைக் கைநழுவவிட்டு விட்ட ஆத்திரம், மனதில் தீயாய் கனன்று கொண்டிருந்தது.

மூன்றாவது நாள், இருவரும் முகிலனின் வீட்டிற்கு வந்து விட்டனர்.



பழைய அமைப்புடன் அரண்மனை போன்ற அந்த வீடும், அதன் பிரம்மாண்டமும் அவளை வெகுவாய் பாதித்தன.

தங்கக் கூண்டிற்குள் அகப்பட்ட சிறு பறவையாய் மனம் தத்தளித்தது.

அங்கு வீட்டிலிருக்கும் நான்கு பேருக்கு, ஏழு வேலையாட்கள் இருந்தனர்.

மாமனாரிடம் ஒருவித பயமும் மரியாதையுமே எழ, மாமியாரும் ஏனோ அவளிடம் அதிகப் பேச்சின்றி ஒதுக்கமாகவே இருக்க, எவரிடமும் இயல்பாகப் பழக முடியவில்லை.

மறுநாள் காலையில் அவளை அழைத்தார் தமிழரசி.

''இங்கே எல்லா வேலைக்கும் ஆளுங்க இருக்காங்க... உங்க வீடு மாதிரி எதுவும் வேலை செய்யத் தேவையில்லை... முகிலனுக்கு எத்தனையோ பேர் பொண்ணு தரேன்னு நிறைய சீர் செனத்தியோட வந்தாங்க! ஆனா, இவன் தான் என்னவோ காணாததைக் கண்ட மாதிரி, நீதான் பொண்டாட்டியா வரணும்னு ஆசைப்பட்டான்.

''அவன் சந்தோஷத்துக்குத் தடையா இருக்க வேண்டாமேன்னுதான் நான் இதுக்கு ஒத்துக்கிட்டேன். அவளை நல்லா கவனிச்சுக்கணும். புரியுதா?''

உயர்த்திய குரலில் அவர் கூறியபோது ''சரி அத்தை!'' என்றபடி மௌனமாக அங்கிருந்து சென்றாள் மிருணா.

''என்ன... எங்கே போறே? போய் சமையல்காரம்மாகிட்டே காபி போட்டு வாங்கி, தம்பிக்கு எடுத்துட்டுப் போ!'' என்று அதட்டி விட்டுத் தன் அறைக்குள் சென்றார் தமிழரசி.

வீட்டில் இருக்கும் போதே கழுத்து நிறைய நகைகளுடன் அம்மன் வீதியுலா வருவதைப் போல் காட்சியளித்தவரைப் பார்த்தால் பயம் கலந்த வியப்பு வந்தது.

முதல் நாளே மனம் எதிலும் ஒட்டாமல் தவித்தது.

காபியுடன் மாடிக்குச் சென்றபோது, முகிலன் விழித் தெழுந்து பேப்பர் படித்துக் கொண்டிருந்தான்.

"காபி..." என்றவுடன் வாங்கிக் கொண்டு அதை மெது வாகப் பருகியபடி, "உனக்கு இந்த வீடு பிடிச்சிருக்கா?" என்று கேட்டான்.

"பிடிக்கலைன்னா மாத்திடுவீங்களா?"

மனதில் மாமியார் விதைத்திருந்த கோபம், சட்டென்று வார்த்தைகளாய் அறுவடையாகிவிட, பயத்துடன் உதட்டைக் கடித்தாள்.

"ஹும்... வீட்டை மாத்த முடியாது! அதை விரும்பற மாதிரி, உன்னை மாத்திடுவேன்" ஆழ்ந்த குரலில் கூறினான் அவன்.

"ஓ... உங்க மேல அவ்வளவு நம்பிக்கையா?"

கேலியாகக் கேட்டவளிடம் "ஆமாம்... வாழ்க்கையே நம்பிக்கையிலதானே இருக்கு. 'நம்பிக்கைங்கறது மெல்லிய மலரைப் போல, வாடி விடக் கூடியதில்லை. அது இமய மலையைப் போன்றது. எவரும் அசைக்க முடியாது.' அப் படின்னு மகாத்மா காந்தி சொன்ன அந்த வரிகள், எனக்கு ரொம்பப் பிடிக்கும்...

"அதனால, எனக்கு எந்த விஷயத்துலயுமே, என்னால முடியும்கிற நம்பிக்கை அதிகம்!" - என்றான் உறுதியான குரலில்.

சட்டென்று விழிகள் கூர்மை பெற, இவனுக்குக்கூட இப் படியெல்லாம் பேசத் தெரியுமாவென்ற பிரமிப்பு வந்தது. அவளுக்குள்!



அவளுடைய முகத்திலிருந்த எண்ணங்களை வாசித்து அறிந்தவன் "என்ன யோசனை? இவனுக்கு இதெல்லாம் கூடத் தெரியுமான்னு ஆச்சர்யமா இருக்கா? நான் நிறையப் படிப்பேன். உனக்கு போரடிக்குதுன்னா அதோ அந்த பீரோவைத் திறந்து பாரு! என் கலெக்ஷன்ஸ் அதிலே நிறைய இருக்கு. எடுத்துப் படிக்கலாம்" என்றபடி குளிக்கச் சென்றான்.

அவன் கூறியதை உடனே செய்ய விருப்பமின்றி கீழே இறங்கிச் சென்று சமையலறையில் உதவி செய்து கொண் டிருந்தபோது தமிழரசி அங்கு வந்தாள்.

"இங்கே என்ன செய்யறே? அங்கே முகிலன் தயாராகி வந்தாச்சு பாரு. அவனைக் கவனி! பெரிய இடத்திலிருந்து பொண்ணு எடுத்திருந்தா அதெல்லாம் தானே தெரிஞ் சிருக்கும். ஒண்ணுமில்லாத வீட்டில இருந்து வந்தா, இப் படித்தான்... சமையல் கட்டும் கையுமா நிக்க வேண்டியது தான்!" கூரென்று தைத்தன, வார்த்தை அம்புகள்!

மனம் கசங்கிவிடத் திரும்பியபோது, சமையல்காரம்மா வின் பரிதாபப் பார்வை இதயத்தைத் தைத்தது.

மௌனமாக ஹாலுக்கு வந்தபோது, வேதனையில் விழிக்குளம் ததும்பியது.

அப்போது எதிரில் வந்த முகிலனிடம் அந்தக் கோபமெல் லாம் திரும்பிவிட - இதற்கெல்லாம் அவன்தானே காரணம் என்று தோன்றியது.

"உங்களுக்கு ஏதாவது வேணுமா? உங்க அம்மா கேக்கச் சொன்னாங்க! அவங்க ஆசைப்பட்ட மாதிரி, பணக்கார இடத்துல பொண்ணு பாத்துக் கல்யாணம் பண்ணிட்டிருக்க வேண்டியதுதானே... நானா உங்களைக் கல்யாணம்

பண்ணிக்கறேன்னு சொன்னேன்...? நீங்க தானே...'' படபடவெனப் பொரிந்தவளைக் கை மறித்து அடக்கினான்.

''உஷ்... கொஞ்சம் அமைதியாப் பேசறியா? இது உங்க வீடு மாதிரிக் கிடையாது... சுத்தி நிறைய வேலைக்காரங்க இருப்பாங்க... கவனமாப் பேசணும்! எதுவாயிருந்தாலும் மாடியில போய்த் தனியாப் பேசலாம்.''

தணிந்த குரலில், ''அதைத்தான் சொல்றேன்... எங்க வீட்டு நிலைமை தெரிஞ்சும், ஏன் என்னைக் கல்யாணம் செஞ்சுக்கிட்டீங்க... நாங்க மிடில் கிளாஸ்தான்! சின்ன வீடுதான். ஆனா, அங்கே அன்பு, நிம்மதி, சந்தோஷம் எல்லாமே நிறைஞ்சிருந்தது'' என்றாள்.

''அப்போ இங்கே அப்படி இல்லைங்கிறியா...?''

அடிக்குரலில் கேட்டாலும், பெரும் சீற்றம் தெரிந்தது அவனிடம்!

அவனுடைய முதல் கோபம் அவளை மிகவும் பாதித்து. இதயம் கசிந்ததால், இமைகளின் ஓரம் நீர்த்துளிகள் துளிர்த்தன.

பதிலாக ஏதும் கூறாமல் வேகமாக மாடிக்குச் சென்று விட்டாள் அவள்.

யோசனையுடன் தன் தாயிடம் சென்றவன், ''அம்மா! ஒரு நிமிஷம் என் கூட வாங்க'' என்று அவரை அறைக்குள் அழைத்துச் சென்றான்.

"என்னப்பா..?" என்று புரியாமல் கேட்டவரிடம், "மிருணாளினி சின்னப் பொண்ணும்மா... அவளுக்கு நம்ம வீட்டுப் பழக்கமெல்லாம் தெரியாது! எதுவா இருந்தாலும், மெதுவா சொல்லிக் குடுத்தாக் கத்துப்பா. நீங்கதான் அவளுக்கு



எல்லாம் பழக்கி விடணும். புதுசு இல்லையா? அதான் மிரண்டு போயிருக்கா.''

முன்பு எதற்கெடுத்தாலும் கோபப்படுபவனின் இயல்பு இப்போது மாறி இருப்பது ஆச்சர்யத்தை அளித்தாலும், அது அவன் விரும்பி ஏற்றுக் கொண்ட மனைவியால் வந்ததோ என்ற கோபமும் எழுந்தது.

''ஏன்... உன்கிட்ட அவ என்னைப் பத்தி குறை சொன்னாளா?'' எரிச்சலுடன் கேட்டார்.

''பாத்தீங்களா, அவ எதுவுமே சொல்லலை. நானாதான் கேக்கறேன். எந்தக் காலத்திலயும், நீங்க அவளுக்கு ஒரு அம்மாவா இருக்கணும். மாமியாரா இருக்கக் கூடாதுங்கறது தான் என்னோட விருப்பம். அதான் முதல்லயே சொல்றேன்'' - தாழ்ந்த குரலில் கூறினான் முகிலன்.



# 4

மனதிற்குள் ஒரு முடிவுக்கு வந்த தமிழரசி.

''முகிலா! நான் உன் பொண்டாட்டியை உன்னைக் கவனிச்சிக்கன்னு மட்டும்தான் சொன்னேன்ப்பா... இனிமே அதைக்கூட பேசமாட்டேன்'' என்று கூறிவிட்டுத் திரும்பிக் கொண்டார்.

ஒரு பெருமூச்சுடன் தோளைக் குலுக்கிக் கொண்டு வெளியே வந்தவன், டைனிங் டேபிளில் இருந்த டிபனை சாப்பிட்டுவிட்டு, மாடிக்கு வந்தான்.

மிருணாளினி, ஜன்னலருகில் நின்று தூரத்தே தெரிந்த திராட்சைத் தோட்டத்தையும், புகை படிந்த ஓவியமாய்

நீண்டிருந்த மலைத் தொடர்களையும் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''மிருணா! நமக்குன்னு விருப்பங்கள் ஆயிரம் இருக்கலாம். ஆனா, ஒரு குடும்பத்துக்கு வந்தப்புறம் சில பிடிக்காத விஷயங்களையும் சகிச்சுக்கப் பழகிக்கணும்'' ஆழமாக வந்தது அவன் குரல்.

கோபமும் வேதனையுமாக அவள் நிமிர்ந்தபோது, ''நான் கிளம்பறேன்! மத்தியானம் லஞ்சுக்கு வந்துடுவேன்.'' - என்றபடி அவன் கிளம்பினான்.

வாசலுக்குச் சென்று அவனை வழியனுப்பவில்லை என்றால் அதற்கு வேறு மாமியார் கோபப்படுவாரோ என்று தோன்ற, இறுகிய முகத்துடன் அவனைப் பின் தொடர்ந்தாள்.

அவன் கிளம்பிச் சென்ற பிறகு, கீழே எந்த வேலையுமின்றி அமர்ந்திருக்கவும் மனம் ஒப்பவில்லை.

முகிலன் புத்தகங்களைப் பற்றிக் கூறியது ஞாபகம் வந்தது.

மாடிக்குச் சென்று ஆவலுடன் அந்த அலமாரியைத் திறந்த போது அங்கு வரிசையாக நிறைய புத்தகங்கள் அடுக்கப் பட்டிருந்தன.

விவேகானந்தர், மகாத்மா காந்தி, ராமகிருஷ்ண பரம ஹம்சர், புத்தர், அப்துல்கலாம், கார்ல்மார்க்ஸ், அரவிந்தர் என்று உயர்ந்த சிந்தனையாளர்களின் பல புத்தகங்கள், அங்கு கம்பீரமாய் அணிவகுத்திருந்தன.

அந்த நிமிடம் அவளுக்குள் பெரும் வியப்பும் ஆச்சர யமும் கை கோர்த்தன.

இவ்வளவு உயர்ந்த சிந்தனையாளனாகத் தான் அவனை எதிர்பார்த்திருக்கவில்லை என்பது புரிந்தது.



அந்த நிமிடம், உருவத்துக்கும் உணர்வுகளுக்கும் சம்பந்த மில்லை என்றும் தோன்றியது.

ஏனோ அவன் மேல் முதன் முதலாக ஒருவித மதிப்பும் மரியாதையும் எழுந்தன.

* * *

மதியச் சாப்பாட்டிற்கு அவன் வந்த போது, அவள் மாடி யறையில் புத்தகம் படித்துக் கொண்டிருந்தாள்.

கீழே சில உறவுக்காரர்கள் வந்திருந்தனர்.

''என்ன அண்ணி! நாங்க கல்யாணத்துக்கு வரலைன்னு கோபத்துல உங்க புது மருமகளைக் கண்ணிலேயே காட்ட மாட்டேங்கறீங்களா?''

உறவுப் பெண் ஒருவர் கிண்டல் செய்து கொண்டிருந்தார்.

அப்போது உள்ளே வந்த முகிலனைக் கண்டதும், ''உன் பொண்டாட்டியைப் பாத்துட்டுப் போகலாம்னு வந் தோம்ப்பா'' மெதுவாகக் கூறினார்.

''அம்மா... மிருணா எங்கே?''

அவன் கேட்க, ''மாடியிலதான் இருப்பா. போய் வரச் சொல்லுப்பா'' என்றார் தமிழரசி.

திடீரென்று அறைக்குள் வந்தவனைக் கண்டதும், பதறிப் போய் எழுந்தவளின் மடியிலிருந்த புத்தகம் தவறிக் கீழே விழுந்தது.

மெதுவாகக் குனிந்து அதை எடுத்தவன், ''புத்தரின் மொழி களா? ரொம்ப அற்புதமா இருக்கும்... படிச்சிட்டியா?''

''ம்...'' தலைகுனிந்தபடியே முணுமுணுத்தாள் அவள்.

"கீழே நம்ம சொந்தக்காரங்க சிலர் வந்திருக்காங்க... அம்மா உன்னை வரச் சொன்னாங்க! நீ முன்னாடி போ... நான் முகம் கழுவிட்டு வரேன்" என்றான்.

"நான் போகமாட்டேன். உங்கம்மா என்னை அவங்க எல்லாருக்கும் எதிரிலேயும், ஏதாவது மட்டமா பேசுவாங்க. என்னால தாங்கிக்க முடியாது" வீம்புடன் கூறினாள் அவள்.

"ம்... இப்பத்தான் புத்தரின் மொழிகள் படிச்சே! 'உணர்வுகளை நீ ஆட்சி செய்... இல்லையெனில் அது உன்னை ஆட்சி செய்யும்! தீவிர உணர்ச்சி போன்ற அழிக்கும் நெருப்பு வேறெதுவுமில்லை.' அப்படின்னு படிச்சிருப்பியே?" - மெதுவாகக் கேட்டான்.

அவள் அசையாமல் நிற்பதைக் கண்டதும், "ஓகே! இங்கேயே இரு... ஆனா நான் வந்து உன்னைத் தூக்கிட்டுப் போக வேண்டி இருக்கும். எது பெட்டர்? நீயே போறியா... இல்லை?" கண்ணோரங்கள் சுருங்க அவன் குறும்புடன் கேட்க, மறுநிமிடம் மிருணாவின் நெஞ்சம் விதிர்த்துப் போனது.

பதிலேதும் சொல்லாமல் திரும்பிக் கீழே சென்றாள்.

திருமணத்திற்கு வராத அந்தப் பெண்கள், கோவில் சிலையே உயிர்பெற்று வந்ததைப் போல் நடந்து வந்தவளைக் கண்டு, பிரமித்துப் போயினர்.

அவர்கள், அவளை அருகில் அமர்த்தி கேள்விக் கணைகளைத் தொடுக்க, வெட்கம் என்ற பெயரில் தலைகுனிந்து சமாளித்துக் கொண்டிருந்தாள் அவள்.

திடீரென்று, "என்ன? என் பொண்டாட்டிய சுத்தி உக்காந்து ராகிங் பண்றீங்களா?" கிண்டலாகக் கேட்டுக் கொண்டே வந்து, அவளருகில் இயல்பாக அமர்ந்தான் முகிலன்.



"உன் பொண்டாட்டி என்ன... தங்கச்சிலை மாதிரியில்லை இருக்கா... இத்தனை அழகை நான் பாத்ததே இல்லை போ!" என்றார் ஒரு வயதான பாட்டி.

"அப்பத்தா! அவ என்னோட தேர்வாச்சே... அப்படித்தான் இருப்பா! நான் என்ன, உங்க வீட்டுத் தாத்தா மாதிரியா செலக்ட் பண்ணுவேன்."

கிண்டலாகக் கூறிவிட்டு, அவளைப் பார்த்துக் கண் சிமிட்டினான் முகிலன்.

தர்ம சங்கடத்துடன் அவள் தலைகுனிந்து கொள்ள, கிண்டலும் கேலியுமாகப் பொழுது சென்றது.

சாப்பிட்டுவிட்டு அனைவரும் விடைபெற்றுச் சென்றதும், மாடிக்குச் சென்றாள் மிருணா.

அவளைப் பின்தொடர்ந்து வந்த முகிலன், "தேங்க்ஸ்!" என்றான் ஒரு மாதிரிக் குரலில்.

"எதுக்கு...?"

மெல்லிய குரலில் அவள் கேட்டபோது, "என் வார்த்தைக்கு மதிப்புக் குடுத்துக் கீழே வந்ததுக்கு!" என்றபடி கட்டிலில் படுத்துக் கொண்டான்.

தன்னை தூக்கிச் செல்வதாக மிரட்டிவிட்டு, இப்போது என்ன நன்றி சொல்வது என்று தோன்றும் போதே, முகிலனின் குரல் தொடர்ந்தது.

"நீ ஏன் இன்னிக்கு சரியாவே சாப்பிடலை... அசைவ சமையல் உனக்குப் பிடிக்காதா?" அவனிடம், மிருணாவைப் பற்றித் தெரிந்து கொள்ளும் ஆர்வம்!

"ம்... எனக்கு நான்-வெஜ் பிடிக்காது!" என்றாள்.

"உனக்குப் பிடிக்கலைன்னா, நானும் இனிமே சாப்பிடலை! கொஞ்சம் கொஞ்சமா விட முயற்சி பண்றேன்." - என்றான்.

பதறிப்போய் எழுந்தவள், "வேண்டாம்... நீங்க சாப்பிடுங்க... எனக்காக நீங்க எதையுமே மாத்திக்க வேண்டாம்" என்றாள் வேகமாக.

"ஓ! 'அதே மாதிரி உங்களுக்காகவும் நான் எதையுமே மாத்திக்க மாட்டேன்'னு சொல்லாம சொல்றே... அப்படித் தானே?"

"அப்படி இல்லை!" முணுமுணுத்துவிட்டுத் திரும்பிப் படுத்துக் கொண்டவளையே சிறிது நேரம் பார்வையால் இதமாகக் கோதியவன், பிறகு மெல்லக் கண்ணயர்ந்தான்.

ஆழ்ந்த உறக்கத்தில் ஏதோ சப்தம் கேட்டு அவள் கண் விழித்தபோது, தூய வெள்ளை வேட்டி சட்டையணிந்து முகிலன் வெளியில் கிளம்பத் தயாராக நின்றிருந்தான்.

புரியாமல் விழித்தவளிடம், "நீ படுத்துக்கோ! நான் எப்பவுமே மத்தியானத்துல சாப்பிட்டப்புறம் ஒரு மணி நேரம் ரெஸ்ட் எடுத்துட்டு மூணு மணிக்கு வயலுக்குக் கிளம்பிடுவேன். திரும்பவும் ஆறு மணிக்குத்தான் வருவேன்" - என்று கிளம்பினான்.

இரவில் சரியாக உறங்க முடியாமல், அவனருகில் படுத்து வெகு நேரம் விழித்திருப்பதால், அவள் இமைகளை உறக்கம் கொஞ்சித் தழுவியது.

பிறகு விழித்து எழுந்தபோது மணி ஐந்தாகி இருந்தது.

பதறி எழுந்து முகம் கழுவி வேறு புடவையணிந்து தயாராகிக் கீழே வந்தாள். சமையல்காரம்மா காபியும் டிபனும் தர - அவள் மட்டும் அநாதையாய் தனித்து விடப்பட்ட உணர்வு!



மாமனார் வெளியில் சென்றிருக்க, மாமியாரோ எல்லாவற்றையும் மேற்பார்வை செய்தபடி வீட்டைச் சுற்றி வர, தான் என்ன செய்வதென்று யோசித்தாள்.

காதல் கொண்டு மணந்திருந்தால், ஒருவேளை இனிய தவிப்புடன் இதயம் படபடக்க முகிலனுக்காகக் காத்திருந்திருக்கலாம்.

மெதுவாக நடந்து தோட்டத்திற்குச் சென்றபோது, அங்கு பரவித் தெரிந்த பசுமையும் மலர்களும் மனதை லேசாக்கின.

அப்போது படபடவென்ற புல்லட்டின் ஓசை, அவள் கவனத்தைக் கலைத்துத் திரும்பச் செய்தது.

புல்லட்டை லாவகமாக ஓட்டியபடி கம்பீரமாக வந்து கொண்டிருந்த முகிலனின் உருவம், முதன் முதலாய் அவளுக்குள் ஆழமாகப் பதிந்தது.

அவனிடமிருந்து பார்வையை விலக்காமல் சிலையாய் நின்றிருந்தவளினருகில் வந்தவன், "என்னடா... நம்ம தோட்டத்துல புதுசா ஒரு பூப் பூத்திருக்கு...! பூக்களிலே சிறந்தது 'டக்லிட்' மலர்னு படிச்ச ஞாபகமாச்சே. ஒரு வேளை அதுதானோன்னு பாக்க வந்தேன்" என்றான் விழிகள் மின்ன.

அதுவரை உணர்ந்த தனிமையும் பாதுகாப்பின்மையும் திடீரென்று விலகி, மனதை நிறைத்தன.

"ஊஹூம்... பாவம் இது ஒரு ஏழை வீட்டுப் பூ!" என்றாள் அவளும் உடனே.

"ம்... ம்... பாக்க அப்படித் தெரியலையே! பக்கத்துல வந்தாலே அனலாத் தகிக்குது. ஒருவேளை 'நெருப் பூ'வோ...?" கிண்டலாகக் கேட்டான்.

ஒரு கணம் கோபமாகக் கண்களை இறுக மூடித் திறந்தவள், வேகமாக உள்ளே சென்று விட்டாள்.

முதலில் மருமகள் கோபமான முகத்துடன் உள்ளே வருவதையும், தொடர்ந்து வந்த மகனுடைய முகத்தில் யோசனையையும் கண்ட தமிழரசி, ''என்னய்யா... டிபன், காபி நான் எடுத்துட்டு வரவா? இல்லை...'' என்று நிறுத்தினார்.

அவருடைய பேச்சின் உட்பொருளைப் புரிந்து கொண்டாள் மிருணா.

''நான் எடுத்துட்டு வந்து தரேன்!'' என்றபடி வேகமாக சமையலறைக்குச் சென்று எடுத்து வந்து அவனிடம் கொடுத்து விட்டு, மாடிக்குச் சென்றாள்.

அன்றிரவு சிவராத்திரியாய் சென்றது.

மறுநாள் காலையில் வெளியில் சென்றுவிட்டு வரும் போதே, அவளுடைய முதுகலை பட்டப் படிப்பிற்கான கரஸ்பாண்டன்ஸ் கோர்ஸ் அப்ளிகேஷனையும், சில புத்தகங்களையும் வாங்கி வந்து அவளிடம் கொடுத்தான், முகிலன்.

மனதில் நன்றியுணர்ச்சி ஊற்றெடுக்க, ''ரொம்ப தேங்க்ஸ்... நான் சொன்னதை மறக்காம ஞாபகம் வச்சிருந்ததுக்கு!'' மகிழ்ச்சியுடன் கூறினாள் மிருணா.

''நான் எதையுமே சுலபத்தில மறக்க மாட்டேன். மனசில பதிஞ்சதை அழிக்கவும் மாட்டேன்''

அவன் குரலில் புதிராய் ஏதோ செய்தி!

உடனே அப்ளிகேஷனைப் பூர்த்தி செய்து அவனிடம் கொடுத்து விட்டு ஆவலுடன் புத்தகங்களை எடுத்துப் பிரித்துப் பார்த்தபோது, அவன் குரல் இடைமறித்தது.



''கல்யாணம் ஆன புதுசிலே, பொதுவா எல்லாத் தம்பதிகளும் படிக்கற பாடமோ வேறயா இருக்கும். நம்மளோடது கொஞ்சம் வித்தியாசமா இருக்கு... இல்லை?''

குறுகுறுத்த விழிகளுடன் அவன் கேட்க, மிரட்சியுடன் நிமிர்ந்தாள் மிருணா.

ஆனால், அந்தக் கண்களில் தெரிந்த குறுஞ்சிரிப்பு, அவன் பேசியது இதமான கேலி என்பதை அவளுக்கு உணர்த்தியது.



5

மிருணாளினி நிம்மதிப் பெருமூச்சுடன் நிமிர்ந்தபோது, ''நாம இன்னிக்குக் கோவிலுக்குப் போயிட்டு வரலாமா?'' கேட்டான் முகிலன்.

''ம்... போகலாம்'' ஆர்வத்துடன் கூறியவள், உடனே பக்கத்து அறைக்குச் சென்று மெலிதான சரிகைக் கரையிட்ட பிங்க் நிற மைசூர் கிரேப் அணிந்து தயாராகி தேவதையாக வந்தாள்.

அவளைக் கண்டதும், சுவாரசியமாக ஒற்றைப் புருவத்தை ஏற்றி இறக்கி ரசித்தவனைப் பார்த்தபோது, மிருணாவின் மனதிற்குள் புதிதாய் சிறு நாணத்தின் சாயல்!

கீழே வந்து மாமனார் - மாமியாரிடம் கூறிவிட்டு கிளம்பினர்.

''ஒரு நிமிஷம் இரு!'' என்று உள்ளே சென்ற தமிழர நெருக்கமாகத் தொடுத்திருந்த நித்யமல்லிப் பூச்சரத் அவளுடைய நீண்ட பின்னலுக்குப் பொருத்தமாக வைத் விட்டார்.

கோவில் வாசலில் காரிலிருந்து இறங்கியதும், எதிர்ப்பட்டவர்களெல்லாம் முகிலனை மரியாதையுடன் வணங்கிச் செல்ல, அவனருகில் உரிமையுடன் செல்வது, புதுவித அனுபவம்!

அர்ச்சனை செய்து முடித்த பிறகு, கோவில் பிரகாரத்தில் சிறிது நேரம் மௌனமாக அமர்ந்திருந்தனர்.

ஆலய மணியின் எதிரொலியாய்ப் படபடவெனச் சிறகடித்த புறாக்களின் ஓசையையும், கோபுரத்துத் தேன்கூடுகளின் அழகையும் ரசித்தபடி இருந்தவளின் ஏகாந்தத்தை அவன் குரல் திடீரெனக் கலைத்தது!

''மிருணி! உனக்கு என் மேல வெறுப்பு எதுவும் இல்லையே?'' மெதுவாகக் கேட்டான் அவன்.

சட்டென்று வந்த அந்தக் கேள்வி முகத்திலறைய, அவள் யோசிப்பதற்குள் ''இல்லை!'' என்று தன் அனுமதியின்றியே உதடுகள் முணுமுணுத்தது, அதிர்ச்சியைத் தந்தது.

''ம்... சரி!'' என்றபடி அவனும் ஏதோ யோசனையில் ஆழ்ந்து போக, தான் அவனைத் தவறாகக் கணித்திருக்கிறோமோவென்று தோன்றியது.

வெளித்தோற்றத்தை வைத்து, அவனை மிகவும் முரட்டுத்தனமான பட்டிக்காட்டுப் பண்ணையார் என்று தான் எண்ணியிருந்ததை, அவன் முதல் நாளே சிதறடித்ததும் ஞாபகம் வந்தது.

தான் கண்ணியமானவன் என்பதை, படுக்கையறையில் அவன் செயல்கள் வெளிப்படுத்தியதும்... உயர்ந்த சிந்தனையாளன் என்பதை அவனுடைய பேச்சுக்களும், புத்தகங்களும் நிரூபித்ததும்... நியாயமாக நடக்காவிட்டால்



கோபப்படுபவன் என்பதை அவனுடைய முதல் கோபம் தெரிவித்ததும் நினைவில் படர்ந்து, பெரும் சஞ்சலத்தை அளித்தன.

வீட்டிற்குத் திரும்பி வரும்போது, வழியில் அந்தப் பைத்தியம் பாதையோரம் மயங்கிக் கிடப்பது தெரிந்தது.

உடனே காரை நிறுத்தச் சொன்ன முகிலன், ''காசியண்ணன்... தண்ணி பாட்டிலை எடுத்துட்டுப் போய், அந்தப் பொண்ணு முகத்தில தெளிச்சு எழுப்புங்க... ஏன் இப்படி விழுந்து கிடக்கு?'' என்று டிரைவரை அனுப்பி விட்டு இறங்கினான்.

மயக்கம் தெளிந்து விழித்தவளைக் கண்டதும், ''நீங்க அந்தப் பொண்ணை பக்கத்துல இருக்கற பிரைமரி ஹெல்த் சென்டருக்கு அழைச்சிட்டுப் போய் டாக்டர்கிட்டக் காட்டுங்க. நாங்க ரெண்டு பேரும், எங்க மாமனார் வீட்டுக்குப் போயிட்டு வீட்டுக்கு வரோம்'' என்றபடி காரில் ஏறினான்.

* * *

மாப்பிள்ளையும் பெண்ணும் சொல்லாமல் கொள்ளாமல் திடீரென்று வந்து நின்று கொடுத்த இன்ப அதிர்ச்சியில், இருவருக்குமே ஒன்றும் புரியவில்லை.

அவர்களை மகிழ்ச்சியுடன் வரவேற்று அமர வைத்து விட்டு, ''டிபன் ஏற்பாடு பண்ணு வனி!'' என்றார் லிங்கம்.

''இல்லை மாமா! எதுவும் வேணாம். அம்மா அங்கே நைட் டிபனுக்கு ரெடி பண்ண சொல்லியிருப்பாங்க. காபி மட்டும் போதும்'' முகிலன் இயல்பான குரலில் கூறினான்.

''இருக்கட்டும் மாப்பிள்ளை! வனி... நீ போய் ஏதாவது ஸ்வீட், காரம் தயார் பண்ணு!'' என்றார்.

"அப்பா விபூதிப் பிரசாதம் எடுத்துக்கங்க" என்று அளித்து விட்டு, ஒரு துள்ளலுடன் தாயின் பின்னே சென்றவளையே ஒருவித ஆர்வத்துடன் கவனித்தவன், விக்னத்திடம் திரும்பிப் பேச ஆரம்பித்தான்.

முதலில் சம்பந்தியைப் பற்றி விசாரித்தவர், பிறகு தொழிலைப் பற்றிக் கேட்க - இருவரிடையேயும் பேச்சு சுவாரசியமாகச் சென்றது.

உள்ளே சென்றதும் அம்மாவை அணைத்துக் கொண்டாள் மிருணா.

"அக்கா எங்கேம்மா? நான் இல்லாம ஜாலியா இருக்கீங்க இல்லை?" சலுகையுடன் கேட்டபோது திரும்பிய தேம்பாவனியின் கண்களில் கண்ணீர் முத்துக்கள்!

"ஏம்மா அழறீங்க? சாரி... நான் சும்மா விளையாட்டுக்குச் சொன்னேன்." ஆதரவுடன் அவர் கண்களைத் துடைத்து விட்டாள்.

"உன்னைப் பிரிஞ்சாலும், உனக்கு ஒரு அருமையான வாழ்க்கை அமைஞ்சதேன்னு சந்தோஷப்படறேன்டி! ஆனா, உன் அக்காவை நினைச்சாத்தான்..." முடிக்காமல் நிறுத்தினார்.

"என்னம்மா! அக்காவுக்குக் குழந்தை இறந்து போயிடுச்சேன்னு வருத்தப்படறீங்களா? எனக்கும் கஷ்டமாத்தான் இருக்கு. பாருங்க கூடிய சீக்கிரமே அக்காவுக்கு ஹம்சத்வனி குட்டிப்பாப்பாவா வந்து சந்தோஷத்தைக் குடுக்கப் போறா பாருங்க" அவரைத் தேற்றும் விதமாகக் கூறினாள்.

"ம்... மீனாவை நேத்துத்தான் மாப்பிள்ளை அழைச்சிட்டுப் போனாரு... சரி அதை விடு. உனக்கு அவங்க வீடு பிடிச்



சிருக்கா? எல்லாரும் நல்லாப் பழகுறாங்களா?" ஆர்வத்துடன் விசாரித்தார்.

"நான் நல்லாருக்கேம்மா! ஒரு வேலையும் இல்லை. சும்மா உக்காந்து துருப்பிடிச்சிப் போயிடுவேனோன்னு பயமா இருக்கு. எல்லாத்துக்கும் ஆள் இருக்கறதினாலே, அத்தை என்னை ஒரு வேலையும் செய்ய விடறதில்லை. இன்னும் கொஞ்ச நாளானா அங்கே நல்லாப் பழகிடும்னு நினைக்கிறேன்."

"மாப்பிள்ளை உன்கிட்ட அன்பா நடந்துக்கறாரா மிருணா?"

அவர் கேட்க, "ம்... ரொம்ப! எனக்குப் படிக்கறதுக்கு 'புக்ஸ்' எல்லாம் வாங்கிட்டு வந்து தந்திருக்காரு... 'எம்.எஸ்ஸி' படிக்கறதுக்கு 'கரஸ்'லே அப்ளிகேஷன் கூடப் போட்டாச்சு" என்ற போது, அவர் முகம் நிம்மதியிலும் சந்தோஷத்திலும் மலர்ந்தது.

இருவரும் பேசிக் கொண்டே கேசரியும், வெங்காய பஜ்ஜியும் செய்து முடித்தனர்.

இரு தட்டுகளில் வைத்து எடுத்துச் சென்று அப்பாவிடமும் முகிலனிடமும் கொடுத்து விட்டுத் தானும் எடுத்துக் கொண்டு தோட்டத்திற்குச் சென்றாள் மிருணா.

அவளுக்கு மிகவும் பிடித்த செண்பக மரத்தடியில் நின்ற போது, அந்த மலர்களின் நறுமணம், நாசியில் ஒருவிதக் கிறக்கத்தை ஏற்படுத்தியது.

அதை ரசித்தபடி நிமிர்ந்தபோது, வான் நதியில் அழகாய் நீச்சல் பழகிக் கொண்டிருந்தன, மேகங்கள்!

சருகுகள் மிதிபடும் சப்தம், யாரோ வருவதை அறிவிக்க, வேகமாகத் திரும்பியபோது, முகிலன் வந்து கொண்டிருந்தான்.

''என்ன... உன்னோட தனிமைத் தவத்தைக் கலைச்சிட்டேனா?''

ஆழமான குரலில் கேட்டபடி, இயல்பாக அவளருகிலிருந்த துனி தவைக்கின்ற கல் மேடை மீது அமர்ந்து கொண்டான்.

அவள் பதில் கூறாததால், ''எனக்கும் இது மாதிரி அமைதியான மாலை நேரம்... இதமான தென்றல் காற்று... பனித மலர்களோட மணம்... திடீர்னு வரும் சாரலான மழை... இதெல்லாம் ரொம்பப் பிடிக்கும்'' - என்றான் மிருதுவாக.

வியப்புடன் அவனை நோக்கியவளுக்கு, தன்னுடைய ரசனைகள் பெரும்பாலும் அவனுடன் ஒத்துப் போவது, ஆச்சர்யம் தந்தது!

யோசனையுடன் நின்றிருந்தவளிடம், ''என்ன... நம்ம வீட்டுக்குப் போகலாமா?'' என்றான் முகிலன்.

'சரி'யெனத் தலையசைத்தபடி அவனைப் பின் தொடர்ந்தாள்.

அப்பா அம்மாவிடம் விடைபெற்று அவன் வீட்டிற்குச் சென்றபோது, அவளுக்கு அங்கு ஒரு பேரதிர்ச்சி காத்திருந்தது.

வாசலிலேயே காத்திருந்த கார் டிரைவர் காசி, காரிலிருந்து இறங்கியவர்களிடம், ''ஐயா! அந்தப் பைத்தியம் கர்ப்பமா இருக்குதுங்களாம், டாக்டர் சொன்னாங்க!'' என்றார் பதட்டத்துடன்.

முகிலனின் இரு புருவங்களும் கோபத்தில் நெளிந்தன.



''சே! தான் யாருன்னே தெரியாத, தன் உணர்வில்லாத ஒரு பொண்ணைப் போய்... ப்ச்... யார் இப்படிச் செஞ்சிருப்பாங்க?'' தலையைக் குலுக்கியபடித் திரும்பினான்.

பயத்தில் வெளிறிய முகத்துடன் அருகில் நின்ற மிருணாளைக் கண்டதும், ''மிருணி... நீ ரூமுக்குப் போ. நான் வரேன்'' என்று மெதுவாகக் கூறி அனுப்பியபோது கால்களில் தடுமாற்றத்துடன், சோர்ந்து நடந்து செல்பவளைக் கண்டபோது ஆயாசமாய்!

'இவள்தான் எவ்வளவு மென்மையானவள்... பிறருக்கு ஒரு கஷ்டம் என்றால் அனிச்சமலராய் எப்படி வாடிப் போகிறாள், இவளைக் காயப்படாமல் மென்மையாகப் பார்த்துக் கொள்ள வேண்டு'மென்ற உறுதி, அந்த நிமிடம் மனதில் நிறைந்தது.

உடனே, காசியைத் தனியே அழைத்துச் சென்று விசாரித்தான்.

''அந்தப் பொண்ணுக்கு, இப்ப அஞ்சு மாசமிருக்குமாம் சின்னய்யா... கலைக்கவும் முடியாதுன்னு சொல்றாங்க'' என்றார் அவர்.

''பாவம்... அந்தச் சின்னக் குழந்தை தப்பு பண்ணிச்சி! கலைக்க வேணாம். சத்திரத்துலேயே இருக்கட்டும். ஆனா இதுக்கு யார் காரணம்னுதான் புரியலை.''

''சின்னய்யா... நான் ஒன்னு சொன்னா நம்புவீங்களா? நம்ம சின்னம்மாவோட அக்கா புருஷன் இருக்காரே, அந்த வாத்தியாரு ஒரு நாளு அந்தப் பைத்தியத்தை சத்திரத்துல வச்சி தப்பா நடந்துக்கிட்டதைச் சிலர் பார்த்திருக்காங்க. எனக்குத்தான் அதை எப்படி உங்ககிட்டச் சொல்றதுன்னு கஷ்டமா இருந்தது.''

மனதிற்குள் கோபம் தீயாய் கனன்று எரிய, "சரி! இதை யார்கிட்டேயும் சொல்லிடாதீங்க. நமக்குள்ளே இருக்கட்டும்." - என்று அவரை அனுப்பி விட்டு வந்து ஹாலில் அமர்ந்தபோது, மனம் எரிமலையாய்!

தன்னில் பாதியாய்... தனக்காகவே உறவுகளைத் துறந்து வாழ வந்த மனைவிக்கு துரோகம் செய்தவனை, அவனால் மன்னிக்கவே முடியவில்லை.

உடனே தன் தந்தையிடம் எல்லாவற்றையும் கூறியவன், தங்கவேலுவைத் தனியே அழைத்து அந்தப் பெண்ணின் எதிர்கால வாழ்க்கைக்கு என்று அபராதம் வசூலித்து, அவனை எச்சரித்து அனுப்பும்படிக் கூறினான்.

அக்காவின் கணவரைப் பற்றி மிருணா அறியாமலிருப்பதே நல்லது என்று அவனுக்குத் தோன்றியது.

ஆனால் தன் அக்காவின் வாழ்க்கையை எண்ணி அவள் தவித்துக் கொண்டிருந்ததையோ, தங்கவேலுவைப் பற்றிய நினைவுகள் அவளை துர்சொப்பனங்களாய் வாட்டியதையோ, அவன் அறியவில்லை.



6

சிறிது நேரம் கழித்து முகிலன் மாடிக்கு வந்தபோது, அழுத கவடு தெரியாமல் முகத்தை நீர் விட்டு அடித்துக் கழுவிவிட்டு அமர்ந்திருந்தாள் மிருணா.

"என்ன... மனைக்குக் கஷ்டமா இருக்கா? சில விஷயங்களை ஜீரணிக்கறதுக்கு முடியாதுதான்."



அவன் கூற பதைத்துப் போய் நிமிர்ந்தவளுக்கு, தங்கவேலுவைப் பற்றி மட்டும் அவனுக்குத் தெரிந்தால், அவன் தன் குடும்பத்தைப் பற்றி என்ன நினைப்பான் என்ற பயம், நடுக்கமாய் உடலெங்கும் ஓடியது.

"ஏய்... ஏன் இப்படி மழையில நனைஞ்ச பறவை மாதிரி ஒடுங்கிப் போயிருக்கே?" கேட்டுவிட்டு, அவள் கன்னத்தில் செல்லமாகத் தட்டினான் அவன்.

சட்டென்று சிறு பிள்ளைகளின் கையில் அகப்பட்ட தும்பியாய் மனம் சடசடத்தது.

அவனுடைய முதல் தொடுகையின் இதமான அந்த நேச நிழலில் மனம் சற்று இளைப்பாறினாலும், நெஞ்சம் வேதனையில் தளும்பியது.

* * *

அந்த நேரம் மீனாவும் தன் வாழ்க்கையை எண்ணிப் பார்க்க ஆரம்பிக்க அவளுடைய மனக்குடத்திலிருந்து கண்ணீர்த் துளிகள் சிதறின.

அவளுடைய திருமணமும், முதலிரவு நிகழ்வுகளும், நினைவலைகளில் மிதக்க ஆரம்பித்தன.

கையில் பால் செம்புடன், பல கனவுகளையும் சுமந்து அவள் அறைக்குள் செல்ல, அவளை அமரச் சொல்லிய தங்கவேலு, "எனக்கு ஒரு உண்மை தெரியணும்" என்றான் முதல் வார்த்தையாய்!

பயத்துடன் நிமிர்ந்தவளிடம், ஒரு கடிதத்தைக் கொடுத்தவன், "இதைப் படிச்சிட்டு உண்மை என்னங்கிறதை நீ சொன்னப்புறம்தான், நான் உன் கூட வாழறதா வேண்டாமான்னு முடிவெடுக்கணும்" என்றான் தீவிரமான குரலில்.

கைகள் நடுங்க அவள் அதைப் பிரித்துப் பார்த்தாள்.

அதில் யாரோ மீனாவைக் காதலித்ததாகவும், அவளுடன் சேர்ந்து ஊர் சுற்றியதாகவும் தான் வேண்டாமென்று வீசி எறிந்தவளை இப்போது தங்கவேலு திருமணம் செய்து கொண்டதாகவும், எவனோ ஒரு விஷமி எழுதி இருந்தான்.

அதைப் படித்தவுடன் மனம் பதறி விழிகள் நீரில் மிதக்க, "சத்தியமா இது உண்மை இல்லீங்க... நான் யாரையுமே விரும்பலை. இது பொய். நம்பாதீங்க. யாரோ வேணு மின்னே எழுதி இருக்காங்க" அவனிடம் கை கூப்பியவள், முகம் மூடி அழ ஆரம்பித்தாள்.

அவன் சட்டென்று வாய்விட்டுச் சிரித்தவன்,

"இந்தக் கடிதம் பொய்யின்னு தெரியும்" என்றபடி, அவளைத் தன்னுடன் சேர்த்து அணைத்துக் கொண்டான்.

"அப்பாடா! இப்பத்தான் நிம்மதியாச்சு. நீ அழகா இருக்கே.. உன்னை யாராவது விரும்பி இருப்பாங்க. விட்டு வச்சிருக்க மாட்டாங்கன்னு என் நண்பர்கள் சொன்னாங்க! அது உண்மையான்னு தெரிஞ்சுக்க நானே எழுதின கடிதம்தான் இது!" என்று கூறியபடி அவன் அதைக் கிழித்துப் போட, சுக்கல் சுக்கலாகச் சிதறியது மீனாவின் மனது.

'போடா... நீயும் வேண்டாம்; உன் வாழ்க்கையும் வேண்டாம்' என்று கூறிவிட்டு எழுந்து வெளியில் சென்று விட வேண்டும் என்று எழுந்த எண்ணத்தை, குடும்ப சூழ்நிலையும், தங்கையின் நினைவும் தடுத்தன.

பிறகு மரக்கட்டையாய் உணர்வுகள் உறைந்த நிலையில் அவனுடன் வாழ ஆரம்பித்தவளுக்கு, அவன் பிறரைத் துன்புறுத்தி அதில் இன்பம் காணுபவனென்பது புரிந்தது.



பிறகும், அவனைப் பற்றி அக்கம் பக்கத்தில் கேள்விப் பட்ட விஷயங்கள் தவறானதாகவே இருந்தன.

அப்பா சரியாக விசாரிக்காமல் முடிவெடுத்து விட்டது புரிய, தன் குடும்பத்திற்கு அவனைப் பற்றித் தெரியாம லிருக்க வேண்டும் என்று தாயிடம் கூடக் கூறாமல் மறைத்து வைத்தாள்.

அதுவே அவனுக்கு வசதியாகிவிட, ஒரு நாள் நிலைமை கை மீறிப் போய் விட்டது.

வீட்டில் வேலை செய்யும் பெண்ணிடமே அவன் தவறாக நடந்து கொள்ள முயற்சித்ததைப் பார்த்தபோது, அவள் ஆறு மாதக் கருவைத் தனக்குள் சுமந்திருந்தாள்.

மானம் போனதால் உயிர் நீக்கிக் கொள்ள அவள் துடித் தாலும், வயிற்றிலிருக்கும் சிசுவை எண்ணித் தன்னை அடக்கிக் கொண்டாள்.

ஆனால், அன்றிரவு குடித்துவிட்டு வந்த தங்கவேலுவிடம் இதைப் பற்றிக் கேட்டபோது, "ஏய்... ஆம்பிளைன்னா அப்படி இப்படித்தான் இருப்பான். என்னையே கண்டிக்கற அளவுக்கு வந்திட்டியா? உன்னை நான் கல்யாணம் செஞ் சிக்கிட்டதுக்குக் காரணமே, தேவதை மாதிரி இருக்கற உன் தங்கச்சிதான்! என்னிக்கிருந்தாலும், அவளை வளைச்சிப் போடாம விடமாட்டேன்" என்று ஆணவத்துடன் கூறினான்.

அப்படியே இடிந்து போய் உட்கார்ந்தவளுக்கு, கதவை அடித்துச் சாத்திவிட்டு அவன் வெளியேறும் சப்தம், உணர்வு களுக்கு அடிக்கப்பட்ட சாவு மணியாய்!

* * *

மறு வாரமே, ஏழாம் மாதமென்று வளைகாப்பு செய்வ தற்காகப் பிறந்த வீட்டிற்கு அவளை அழைத்துச் சென்றனர்.

மீனா ஒரு முடிவுடன் - தாய் தந்தையிடம் தங்கவேலுவைப் பற்றிய எல்லா உண்மைகளையும் கூறிவிட்டாள்.

அவனுடைய வாழ்க்கையில் இவ்வளவு பெரிய சோகமும் துரோகமும் இருந்திருப்பதை அறிந்தவுடனே, இருவரும் உடைந்து போயினர்.

தங்கவேலு எந்த அளவுக்கு வேண்டுமானாலும் கீழ் இறங்குவான் என்ற உண்மை தெரிந்திருந்ததால், தன் தங்கையின் வாழ்க்கையாவது நன்றாக அமைய வேண்டுமே என்ற பதைப்பு வந்தது அவளுக்குள்!

தந்தையிடம் சொல்லி உடனே ஒரு மாப்பிள்ளை பார்த்து மிருணாளினிக்கு திருமணத்தை முடித்து விடும்படிக் கூறினாள் அவள்.

மறுநாளே தரகரை வரவழைத்தார் லிங்கம்.

இந்த வருடமே தன்னுடைய இரண்டாவது பெண்ணுக்குத் திருமணம் செய்து விட முடிவெடுத்திருப்பதாகவும், நல்ல வரன் வந்தால் கூறும்படியும் சொல்லி அனுப்பினார்.

இரண்டு மாதத்தில், சுந்தரபாண்டியனின் வீட்டிலிருந்தே பெண் கேட்டு வர, இதுதான் நல்ல சமயமென்று உடனே அந்த சம்பந்தத்தை முடித்தும் விட்டார்.

அதனால் பெரும் கோபம் கொண்ட தங்கவேலு, இப்போது அவளிடம் சரியாகப் பேசுவதே இல்லை.

குழந்தை இறந்து விட்டதே என்ற பரிதாபமும் இல்லை.

'பெரிய மாப்பிள்ளை' என்று தன்னை மதித்து அனுமதி கேட்காமல் மிருணாளின் கல்யாணத்தை மாமனார் முடித்து விட்டாரே என்ற பெரும் கோபம் வந்திருந்தது அவனுக்குள்!



தினமும் குடித்து விட்டு வந்து, பெண்மையை ஒரு போகப் பொருளாய் - உணர்வில்லா ஜடமாய் நடத்துபவனை எண்ணிய போது, தன் கையாலாகாத்தனத்தை நினைத்து விழிகளில் வழிந்த கண்ணீர் கையில் சூடாகப் பட்டுத் தெறிக்க, நினைவுகள் நிகழ்காலக் கரையில் ஒதுங்கின.

ஆனால், சோகச் சூழலில் மாட்டிக் கரையேற முடியாமல் தவித்து நின்றது, அவள் எதிர்காலம்!

வாசல் கதவை யாரோ பலமாக இடிக்கும் சப்தம் கேட்டுக் கண் துடைத்தபடி எழுந்து கதவைத் திறந்தாள்.

நிற்க முடியாமல் முழு போதையுடன் தள்ளாடியபடி, அங்கு தங்கவேலு நின்றிருந்தான்.

அவனைத் தாங்கிப் பிடித்து அழைத்து வந்து படுக்க வைத்தபோது, நெஞ்சம் வெறுமையாகி விட, விரக்தி வேதனையும் கண்ணீர்த் துளிகளாய்ச் சிதறின.

* * *

மறுநாள் காலையில், ஒரு ஆளை விட்டு தங்கவேலுவை வரவழைத்த சுந்தர பாண்டியனுக்கு முதல் நாள் முகிலன் கூறியது நினைவுக்கு வந்தது.

ஒரு பைத்தியத்திடம் முறை தவறி நடந்து, அதனால் அவளை கர்ப்பமடையச் செய்தவனை நினைத்தபோது, பெரும் ஈனப் பிறவியாய்... மானுடம் தொலைத்தவனாய்த் தோன்றி, கோபத்தை வரவழைத்தது.

ஆனால், தென்னந்தோப்பிற்கு வந்த தங்கவேலு, தான் செய்த தவறை ஒப்புக்கொள்ள மறுத்தான்.

"உங்க மகன்தான் அந்தப் பைத்தியத்தை டாக்டர்கிட்ட அனுப்பி இருக்காரு. அவர் செஞ்ச தப்பை என் மேல்

போடப் பாக்கறீங்களா?'' பழியை முகிலனின் மேல் திருப்பினான்.

"டேய்.. இந்த ஊருக்கே என் மகனைப் பத்தித் தெரியும். நீ தப்புப் பண்ணியதைப் பாத்ததுக்கு சாட்சி இருக்கு. அதை வச்சு என்னால உன்னை ஊர்ப் பஞ்சாயத்துல கொண்டு போய் நிறுத்த முடியும். என் மருமகனோட மானமாச்சேன்னு பாக்கறேன்'' என்றார் பாண்டியன் பெரும் சினத்துடன்.

"சும்மா மிரட்டாதீங்க! உங்ககிட்டே வேலை செய்யற ஆளுங்கதானே வந்து அங்கே சாட்சி சொல்லுவாங்க. நான் அதை ஒத்துக்க மாட்டேன்! உங்களால முடிஞ்சதைப் பாத்துக்கங்க'' - திமிராகப் பேசினான்.

ஒரு கணம் அவனையே வெறுப்புடன் நோக்கியவர், "மனுஷங்களை ஏமாத்தலாம்... ஆனா, தெய்வத்தை ஏமாத்த முடியாது! போ!'' என்று அவனை அனுப்பி விட்டு யோசனையுடன் அமர்ந்திருந்தார்.

அன்றிரவு முகிலனிடம் எல்லாவற்றையும் கூறினார்.

"போனா அந்தப் பொண்ணை மைக்கேல் நடத்துற கருணை இல்லத்துலே சேத்துடலாம். பிரசவம் ஆகட்டும்... அப்புறம் பாப்போம்'' என்றார்.

• • •

நாட்கள் விரைந்து செல்ல, ஆடி மாதம் வந்து விட்டது.

மறுநாள் மகளை அழைத்துப் போக, சீருடன் வருவதாக விக்ரம் ஃபோன் செய்திருந்தார்.

ஆடி மாதம் முழுவதும் மிருணாளினி தாய் வீட்டில் இருக்க வேண்டும் என்கிற சம்பிரதாயத்தைக் கேட்ட உடனே, முகிலனின் மனம் சுருங்கி இறுகிப் போனது.



அன்றிரவு, மிருணா தன் துணிகளை எடுத்து வைத்துக் கொண்டிருந்தாள்.

அப்போது உள்ளே வந்தவன், "ம்... யாரோ ஒருத்தர் ரொம்ப ஜாலியா அம்மா வீட்டுக்குக் கிளம்பியாச்சு போலிருக்கு!'' வறண்ட குரலில் கூறினான்.

"ம்... பெண்களுக்கு இதெல்லாம் தற்காலிகம்தானே? ஆண்களை மாதிரி, அம்மா வீட்டிலேயே கடைசி வரைக்கும் இருக்கற சுதந்திரம்தான் எங்களுக்குக் கிடையாதே! என்ன.. ஒரு மாசம் போகலாம், அவ்வளவுதான்'' என்றாள் அதே குரலில்.

"ஏன்... இங்கே வாரதும், என்னைப் பாக்கறதும், உனக்கு அவ்வளவு கசப்பா இருக்கா...?''

"சாரி! நான் அந்த அர்த்தத்துல சொல்லலை...'' உதட்டைக் கடித்தபடி கூறினாள் மிருணா.

பார்வை ஒரு கணம் அதிகமாகவே அவளுடைய இதழ்களின் மீது பதிந்து விலக, வேகமாக வெளியே சென்று விட்டான் அவன்.

மிருணாவிற்குத் தான் ஏதோ தவறு செய்ததைப் போல் மனம் உறுத்தி, அவன் நினைவுகள் விசுவ ரூபமெடுத்து வியாபித்தன.

அன்றிரவு, நல்ல இடியுடன் கூடிய மழை பெய்ததில், பூமி நன்றாகக் குளிர்ந்திருந்தது.

ஜன்னல் வழியே வீசிய சாரல் காற்று தேகத்தைக் குளிரச் செய்ய, தன்னை குறுக்கிக் கொண்டு படுத்திருந்தாள் அவள்.

விடியல் தன் முகவரியை பூமியில் பதிக்க, மழை வந்து முத்துக் குளித்திருந்த மரங்களில், பறவைகள் தம் பாதம் பதித்து பல்லவி பாட ஆரம்பித்திருந்தன.

ஆழ்ந்த உறக்கத்திலிருந்து கண் விழித்த மிருணாளினி, தன் முகம் வலிமையான ஒரு பரந்த மார்பில் குளிருக்கு இதமாய் புதைந்திருப்பதைக் கண்டதும், ஒருவித பதைப்புடன் விலக ஆரம்பித்தாள்.

அவளைச் சுற்றித் தழுவியிருந்த முகிலனின் கரங்கள், அவளை வலிமையுடன் அணைத்திருந்தன.

தான் எப்படி அவனருகில் வந்தோம் என்ற படபடப்புடன், அவன் விழிப்பதற்குள் எழுந்து சென்று விட வேண்டும் என்ற அவசரமும் சேர்ந்து கொள்ள, தன்னை வேகமாக விடுவித்துக் கொள்ள முயன்றாள்.

அவனுடைய கரங்கள் இரும்புப் பிடியாய் மேலும் இறுகின.

தூக்கக் கலக்கத்தில் நடப்பது என்னவென்று அவள் உணரும் முன்பே வேகமாக இழுத்து அணைத்தவன், தன் உதடுகளை அவளுடைய பட்டுக் கன்னத்தில் அழுத்தமாகப் பதித்தான்.



## 7

தன் முகத்தில் சில்லென்ற பனிநீரை யாரோ பனிச்சென்று அள்ளித் தெளித்தது போன்ற விதிர்ப்புடன் விழித்த மிருணா, வேகமாக அவனை விலக்கித் தள்ளி விட்டு, குளியலறைக்குள் தஞ்சம் புகுந்தாள்.

இதயம் தாறுமாறாகத் துடிக்க, ஆரம்பித்து தன்னிலை இழக்க, கன்னத்தில் பதிந்த அந்த ஈரப் பதிவு இதயத்திலும் ஆழமாய் பதிவதாய்!

தன்னை அமைதிப்படுத்திக் கொண்டவள், மெதுவாகப் பல் துலக்கி குளித்துவிட்டு வெளியில் வந்தபோது, நல்ல வேளையாக முகிலன் அங்கு இல்லை.



அன்று காலையிலேயே அவளை அழைக்க வருவதாக லிங்கம் கூறியிருந்தார்.

சில்க் காட்டன் புடவையணிந்து, முடியைத் தளரப் பின்னித் தயாராகிக் கீழே வந்தபோது, வாக்கிங் முடிந்து வந்து பேப்பர் படித்துக் கொண்டிருந்தான் அவன்.

அவளைக் கண்டதும் குறும்புடன் "குட்மார்னிங்" என்று கூறி ஒற்றைக் கண் சிமிட்ட, பார்வையை சட்டென்று தழைத்தவள், பதிலுக்கு மெதுவாக 'காலை வணக்கம்' கூறினாள்.

பிறகு, தப்பித்தோம், பிழைத்தோம் என்பது போல் அவசரமாக உள்ளே சென்றபோது எதிரில் வந்தார் தமிழரசி.

"பூஜை அறையில போய் சாமி விளக்கை ஏத்திடு... உங்கப்பா அம்மா வர நேரமாச்சு வந்தவுடனே நீ கிளம்பணுமே!" என்றார்.

"சரி அத்தை!" என்றபடி சென்றவளைப் பார்த்த போது, தான் விரும்பியதைப் போல், சீரும் நகைகளுமாய் பெரிய பணக்கார வீட்டுப் பெண் மருமகளாக வந்திருந்தால், இது போலத் தன் பேச்சைக் கேட்டிருப்பாளா என்ற ஐயமும் அவருக்குள் மெதுவாக எழுந்தது.

லிங்கமும், தேம்பாவணியும் வந்தவுடன் மற்றதெல்லாம் மறந்து போனது.

அவர்களுக்கு டிபன் வைத்த பிறகு, ஆர்வமாகக் கிளம்புவதில் ஈடுபட்டது மனம்!

மாமனார் - மாமியாரை வரவேற்று அன்புடன் பேசிக் கொண்டிருந்த முகிலனைப் பார்த்தாள், அவளுக்குள்ளே மெலிதாய் ஒரு உயிர்ப்பூவின் மலர்வு!

சுந்தரபாண்டியனும் தமிழரசியும் சம்பந்திகளிடம் இயல்பாகப் பேசிப் பழக, தன் குடும்பத்தாரை அவர்கள் ஏற்றுக் கொண்ட விதம் நெஞ்சை நெகிழ்த்துவதாய்!

பெரியவர்களின் கால்களில் விழுந்து நமஸ்கரித்த பிறகு, மாடிக்குச் சென்று தன் சூட்கேஸை எடுத்தபோது, முகிலனின் குரல் தடுத்தது.

"ஒரு மாசம் கழிச்சு நீ வரவரைக்கும் நினைவில இருக்கிற மாதிரி, எனக்கு ஏதும் ஸ்பெஷல் கிடையாதா?"

இரு புருவங்களையும் உயர்த்தியபடி கேட்க அவள் நிமிர்ந்தபோது, அவன் பார்வை வெகு கூர்மையாய்!

அவளுக்குள் இனம் புரியாத ஓர் உணர்வை சிற்றுளியாய்ச் செதுக்கியது அவன் பார்வை!

உடனே குனிந்தவள் "புரியலை" என்றாள் மெதுவாக.

"ம்.. உண்மையா புரியாதவங்களுக்கு சொல்லித் தரலாம். ஆனா புரியாத மாதிரி நடிக்கிறவங்ககிட்டே என்ன பண்றது? மாமா எடுத்துட்டு வந்த டாக்ஸிய அனுப்பிட்டேன் நானே உங்களை விட்டுட்டு வந்திடறேன்" என்று கிளம்பினான்.

வீட்டிற்கு வந்து அவர்களை இறக்கி விட்ட பிறகு அவன் கிளம்பியதும், வழியனுப்ப வெளியே வந்தாள் மிருணா.

"ம்.. இந்த ஒரு மாசமும் எனக்கு ரொம்பக் கஷ்டமா இருக்கும்னு நினைக்கிறேன். உன்னைப் பாக்க நான் இங்கே வரலாமில்லை...?"

தாழ்ந்த குரலில் அவன் கேட்க, மெதுவாகத் தலையசைத்தாள்.



பிறகு, அவனுடைய கார் கண்ணை விட்டு மறையும் வரை நின்று பார்த்திருந்தவளுக்கு, நெடுநாள் பழகிய ஒரு நண்பனைப் பிரிவது போன்ற ஒரு உணர்வு!

சிறிது நேரத்தில் மீனாவும் வந்து விட மனம் இயல்பான மகிழ்ச்சியுடன் அங்கு தன்னை இணைத்துக் கொண்டது.

இடையிடையே அந்தப் பைத்தியக்காரப் பெண்ணின் நினைவு வந்தாலும், பிடிவாதமாக அதை மனதின் ஓரம் தள்ளி வைத்தாள் அவள்.

"இப்போ எப்படி இருக்காரு மீனா உன் வீட்டுக்காரரு...?"

தேம்பாவணி கேட்டதும், "அம்மா..." எச்சரிக்கும் தொனியில் மீனா விழிகளை தங்கையிடம் திருப்பினாள்.

"அவளுக்கும் தெரியட்டும்டி... இப்பத்தான் கல்யாணமாயிடுச்சே. அவ என்ன சின்னப் பெண்ணா?" பிடிவாதத்துடன் கூறினார் அம்மா.

"என்னக்கா... என்ன பிரச்னை?"

ஆதரவாகக் கேட்டவளின் மடியில் சரிந்து அழ ஆரம்பித்த மீனா, தங்கவேலுவைப் பற்றிய உண்மைகளை எல்லாம் கூற, மிருணாவின் மனதில் யாரோ சாட்டையால் அடித்தது போன்ற ஒரு வலி!

உடைந்து போயிருந்தவளைச் சமாதானப்படுத்திய மிருணா, "அக்கா தைரியமா இரு... எல்லாம் சரியாயிடும் கவலைப்படாதே!" - என்று தேறுதல் கூறி, சாப்பிட வைத்து அனுப்பி வைத்தாள்.

அன்றிரவு, மிருணாவை அழைத்த லிங்கம் ஒரு பாங்க் பாஸ் புத்தகத்தை எடுத்து நீட்டினார்.

"இந்தாம்மா உன் பெயரிலே என்னால முடிஞ்ச ஒரு தொகையை ஃபிக்ஸட் டெபாசிட்'டிலே போட்டிருக்கேன்'' சிறு முறுவலுடன் கூறினார்.

"இப்ப ஏன்ப்பா இதெல்லாம்?'' அவள் கேட்டாள்.

"நம்ம நிலம் ஒண்ணை பக்கத்து ஊர்க்காரன் ஆக்ரமிச்சிட்டு தகராறு பண்ணிட்டிருந்தான் இல்லையா? நம்ம சின்ன மாப்பிள்ளைதானே அதைப் பேசி முடிச்சு வேற ஒருத்தருக்கு விக்கறதுக்கு ஏற்பாடு பண்ணித் தந்தாரு!

"அந்தப் பணத்தை மூணா பங்கிட்டு உங்க மூணு பேருக்கும் பாங்க்லே போட்டிருக்கேன். ஆனா, மீனாவோடதை மட்டும் நானே வச்சிருக்கேன். உங்கம்மாவுக்கு அப்புறம், அந்தத் தொகையும் அவளுக்கே போய்ச் சேர்ற மாதிரி செஞ்சிருக்கேன். இதிலே உனக்கு ஏதும் வருத்தமில்லையே மிருணா?'' ஒரு பெருமூச்சுடன் கேட்டார்.

"ஏன்ப்பா இப்படிக் கேக்கறீங்க? இந்தப் பணத்தையும் அக்காவுக்கே குடுத்திருந்தீங்கன்னா, நான் இன்னும் சந்தோஷப்பட்டிருப்பேன். என்னைப் பத்திக் கவலைப்படாதீங்க... உங்க மாப்பிள்ளை பாத்துப்பாரு! அக்காவுக்குத் தான் இப்போ ஒரு பாதுகாப்பு தேவை!'' என்றாள் மிருணா.

* * *

மறுநாளே அவளைக் காண வந்த முகிலன், அவளைத் தனியே தோட்டத்திற்கு அழைத்துச் சென்றான்.

"மிருணி! இப்ப அந்தப் பைத்தியத்தோட குழந்தைக்கு யார் காரணம்னு ஆராயறதைவிட... அதுக்கு ஏதாவது உதவி செஞ்சா நல்லதுன்னு நான் நினைச்சேன். அப்பாவும் அதான் சொல்றாங்க!



"பக்கத்து ஊரில அப்பாவோட ஃப்ரெண்ட் மைக்கேல் தான் பாதிரியாரா இருக்காங்க. அங்கே ஒரு கருணை இல்லத்தையும் அவங்க நடத்திட்டு வராங்க. அதனால அந்தப் பொண்ணை அங்கேயே சேத்துடலாம்னு அப்பா சொன்னாங்க!''

"அங்கே எல்லாரையும் சேத்துப்பாங்களா?'' அவள் சந்தேகத்துடன் கேட்டாள்.

"அப்பா, மைக்கேல் அங்கிள்கிட்டப் பேசிட்டாங்க. அங்கே மன வளர்ச்சி இல்லாதவங்களும், அநாதைங்களும் தான் நிறைய இருக்காங்க. அந்தப் பொண்ணும் அங்கேயே இருக்கட்டும்... பிரசவம் ஆகட்டும்.. பாப்போம்'' - என்றான் யோசனையுடன்.

முகிலனையே பிரமிப்புடன் நோக்கிக் கொண்டிருந்தவளுக்கு, அந்த நிமிடம் தங்கவேலுவுக்கும், அவனுக்கும் இடையே இருந்த மலையளவு வித்தியாசம் புரிவதாய்!

'என்ன அற்புதமான மனிதன்..! மனித நேயம் மிகுந்தவன்! எல்லாவற்றையும் விட இவன் என் கணவன்' என்ற பெருமை, மனத்திற்குள் புது சிலிர்ப்பை ஏற்படுத்த முகம் மலர்ந்து விகசித்தது.

"என்ன... மகாராணி இந்த சாம்ராஜ்யத்துல, ரொம்ப சந்தோஷமா இருக்கற மாதிரித் தெரியுது?'' குறும்பு கசிந்தது அவன் குரலில்.

"ம்... கண்ட்ரோல் பண்ண ராஜா இல்லாம, சுதந்திரமா இருக்கா இல்லையா? அதான்!''

வார்த்தைகள் அதே வேகத்தில் வந்துவிட, தன்னால் கூட அவனுடன் இணைந்து இப்படி ரசனையுடன் பேச

முடிகிறதேயென்ற ஆச்சர்யமும், பரவசமும், ஒருங்கே எழுந்தன.

முகிலன் கண்கள் இடுங்க, அவளையே குறுகுறுத்த விழிகளால் வருடினான்.

"ஏய்... என்ன இங்கே வந்ததும் பேச்சு ரொம்ப நல்லா வருது? அங்கே, பாதி நேரம் வெறும் காத்துதான் வரும்!" என்றான் கேலியாக.

தவிப்புடன் தலைகுனிந்தவள், "உள்ளே வாங்க... அம்மா உங்களுக்காக ஏதாவது டிபன் செஞ்சிருப்பாங்க!" என்றாள்.

"பாவம்... அவங்களுக்கு எதுக்கு வீண் சிரமம். நான் கிளம்பறேன்" என்றவனிடம், "வேண்டா விஷயமா நீங்கதான் உதவி செஞ்சதா அப்பா சொன்னாங்க... ரொம்ப தேங்க்ஸ்..." என்றாள் அவள்.

கண்கள் மின்ன, "இந்தச் செப்பு வாயால வெறும் 'தேங்க்ஸ்' மட்டும்தான் உனக்குச் சொல்லத் தெரியுமா?" சீண்டலாகக் கேட்டு விட்டு முகிலன் உடனே கிளம்பினான்.

அன்று அவன் நீங்கிச் சென்றவுடனே, ஒரு கணம் அவள் உலகமே இயங்காது நின்றதைப் போல், ஏதோ ஒரு உணர்வு!

◆ ◆ ◆

அந்த வாரம் முழுவதுமே, எதையோ இழந்து விட்ட உணர்வுடன் நத்தையாய் நகர்ந்து செல்ல, ஒரு நாள் அதி காலையில் அவளுக்கு ஃபோன் செய்தான் முகிலன்.

"ஹலோ...!" அவனுடைய ஆழ்ந்த குரல் சுகமாக அவள் மனதில் சாமரம் வீசியது.

"மிருணி! இன்னிக்கு என்ன ஸ்பெஷல் தெரியுமா? உன் மாமியாரோட பையனுக்குப் பிறந்த நாள்! அந்தக்



குட்டிப் பையனை 'விஷ்' பண்ண மாட்டியா?" சீண்டலாக அவன் கேட்டபோதுதான், அவன் கூறியதன் பொருளே உரைத்தது.

"ஓ...! ஹேப்பி பர்த்டே... மெனிமோர் ஹேப்பி ரிடர்ன்ஸ்" என்றாள் மகிழ்ச்சியுடன்.

"இன்னிக்கு உண்மையா ஹேப்பி பர்த்டேயா நான் உணரணும்னா, என்கூட நீ நாள் முழுக்க இருக்கணும். உங்க வீட்டில உள்ள எல்லாருக்கும் நம்ம வீட்டிலதான் மத்தியானம் சாப்பாடு...!

ஆனா உனக்கும் எனக்கும் காலையில கொஞ்சம் வேலை இருக்கு. எட்டு மணிக்கு நான் அங்கே வருவேன். நீ ரெடியா இரு... ஒரு இடத்துக்குப் போறோம்."

"எங்கே...?"

அவள் ஆவலுடன் கேட்க, "அது சர்ப்ரைஸ்! ஆனா நமக்கு அங்கேதான் டிபன்! மாமாகிட்ட அப்பா பேசணுமாம்... போனை அவர்கிட்டக் கொடு" என்றான்.

அப்பா - அம்மா இருவரும் அவளை வாழ்த்திய பிறகு, குளித்துத் தயாரானவள், அவன் கோவிலுக்கும், ஹோட்டலுக்கும் தன்னை அழைத்துச் செல்வானோ என்ற யோசனையுடன் காத்திருந்தாள்.

அவசரமாக ஸ்வீட் மட்டும் செய்து வைத்துவிட்டு அவளை வரும், அவனை எதிர்பார்த்திருக்க, ஜீன்ஸிலும், டி-ஷர்ட்டிலும் அம்சமாக வந்து இறங்கினான் முகிலன்.

முதன் முதலாக அவனை அந்த உடையில் பார்த்தபோது, மூச்சடைத்துப் போனது, மிருணாவுக்கு!

நேரிலும் அவனை வாழ்த்திவிட்டு இனிப்பைத் தந்து, முகிலன் சாப்பிட்ட பிறகு, ஒரு மோதிரத்தை லிங்கம் பரிசளிக்கக் கிளம்பினார்கள்.

அவனையே அடிக்கடி ஓரக்கண்ணால் நோக்கியபடி அலைப்புறுதலுடன் அமர்ந்திருந்தவளை, அவன் கவனித்து விட்டான்.

அவர்களிடம் விடைபெற்று, இருவரும் காரில் போய்க் கொண்டிருக்கும்போது கேட்டான்:

“என்ன? என்கிட்ட ஏதாவது கேக்கணுமா? அதுக்கு ஏன் இவ்வளவு தயக்கம்?”

தயக்கத்துடன் நிமிர்ந்தவள், “நீங்க ஏன் தினமும் இந்த மாதிரி டிரஸ் பண்ண மாட்டேங்கறீங்க?” கேட்கக் கூடாதென்று நினைத்தாலும் கேட்டு விட்டாள்.

“ம்... நான் கலெக்டர் வேலை பாக்கலைம்மா! வயலுக்கும் தோப்புக்கும் போறதுக்கு, வேட்டி சட்டைதான் சரி... நம்ம பாரம்பரிய உடையே அதுதானே! முக்கியமான நாள்னா, வெளியூர் போனா மட்டும்தான் இப்படி!”

அவனுடைய கார் கோவிலையும் தாண்டிச் செல்ல, யோசனையுடன் அவள் மௌனமாக அமர்ந்திருந்தாள்.

கார் நேரே பக்கத்து ஊருக்குச் சென்று அந்தக் கருணை இல்லத்தின் வாசலில் நின்றது.

ஆச்சர்யத்துடன் திரும்பியவளிடம், “ஒவ்வொரு வருஷமும் என் பிறந்த நாளுக்கு இங்கேதான் காலையில டிபன் சாப்பிடுவோம். இங்க எல்லாருக்கும் நம்ம செலவுல தான் இன்னிக்கு சாப்பாடு, டிபன் எல்லாம்! இந்த தடவை தான் அப்பாவும் அம்மாவும் உன்னை அழைச்சிட்டுப் போகச் சொல்லிட்டாங்க” இயல்பாகக் கூறினான்.



உள்ளே சென்று ஃபாதர் மைக்கேலைப் பார்த்துப் பேசி விட்டு, அவருடன் சாப்பிடும் அறைக்குச் சென்றனர்.

“எஸ்தர்! இங்கே வா... யார் வந்திருக்காங்கன்னு பாரு” என்று அழைத்தார் ஃபாதர்.

“எஸ்தரா? யார் ஃபாதர் அந்தப் பொண்ணு?” என்றபடி முகிலன் திரும்பினான்.

தலைமுடி ‘பாப்’ செய்யப்பட்டு, ஒரு நீண்ட நைட்டியைப் போன்ற உடையணிந்து, அந்தப் பைத்தியம் அங்கு நின்றிருந்தாள்.

“இவர்தான் உன்னை இங்கே சேர்த்து விட்டவர்... இவங்களுக்கு வணக்கம் சொல்லு!”

அவர் கூற, இரு கைகளையும் இணைத்து கோணலான சிரிப்புடன் அவள் வணங்கியபோது, பரிதாபமாக இருந்தது.

“நீ இவளை அழைச்சிட்டு வந்து இங்கே சேர்த்தவுடனே இவளுக்கு ‘எஸ்தர்’னு பேர் வெச்சிட்டோம்ப்பா” சிறு புன்னகையுடன் ஃபாதர் கூறினார்.

இத்தனை நாள் அவளுக்கென்று ஒரு பெயர்கூட இல்லாமல் அந்தப் பெண் தன் சுயத்தைத் தொலைத்து நின்றதும், அவளைப் பற்றி யோசிக்கும்போதுகூட அனைவரும் ‘பைத்தியம்’ என்றே நினைவு கூர்ந்ததையும் நினைத்தால், மனதின் ஓரம் சுரீரென்று ஒரு வலி எழுந்தது மிருணாளினிக்கு.!

முதலில் சிறு பிள்ளைகளுக்கு உணவளித்து விட்டு, பிறகு பெரியவர்களுடன் அவர்களிருவரும் அமர்ந்து சாப்பிட்டபோது, அவர்கள் அனைவரும் கூறிய பிறந்த நாள் வாழ்த்துக்கள் அவன் மனதைக் கசியச் செய்தன.

அங்கிருந்த மனவளர்ச்சி குன்றிய சில மழலை மலர்களைப் பார்த்தபோது பிறரை அழிக்கும் வக்கிரங்களின்றி மனதில் மாசுபடாமல் மானுடம் வென்ற மனிதர்களாய்... வெகுளித்தனமும், புன்னகையும் மட்டுமே சுமந்த ஒருவித தெய்வ நிலையாய்த் தோன்றியது.

மனம் நிறைந்ததில் விழிகள் பளபளக்க நிமிர்ந்தவள், "தேங்க்ஸ் முகில்!" என்றாள் உணர்ச்சிகள் நிறைந்த குரலில்.

"வெல்கம்! நீ எனக்குக் கொடுத்த அருமையான பர்த்டே கிஃப்ட் எது தெரியுமா? இப்ப சொன்னியே அழகா... 'முகில்'னு... அதான்" கூறியவனின் விழிகளில் மகிழ்ச்சிப் பூக்கள் மலர்ந்திருந்தன.



8

இருவரும் வீட்டிற்கு வந்தபோது, மிருணாவின் பெற்றோருடன் மீனாவும் வந்திருந்தாள்.

ஆனால் தங்கவேலு மட்டும் வரவில்லை.

அன்று சமையலுக்கு, அவளும் மீனாவும் உதவி செய்ய, பொழுது இனிமையாகச் சென்றது.

விருந்து சாப்பிட்ட பிறகு அவர்கள் விடைபெற, மிருணாவை மாலையில் கொண்டு வந்து விடுவதாகக் கூறினான் முகிலன்.

மாலையானதும், கோவிலுக்குச் சென்று அர்ச்சனை செய்து விட்டு அவளை வீட்டில் இறக்கிவிட வந்தபோது, காரிலிருந்து இறங்கும்முன் அவனைப் பிரிய மனமின்றித் தவித்துப் போனாள் மிருணா.



"சாரி! உங்க பர்த்டேக்கு, என்னால கிஃப்ட் ஒண்ணுமே குடுக்க முடியலை" குற்றவுணர்வுடன் கூறினாள்.

"ஏன்... நீ நினைச்சா இப்பக்கூடக் கொடுக்கலாம். நானும் ரொம்ப நாளா எதிர்பார்த்துட்டு இருக்கேன். மத்த எல்லாத்தையும் விட விலை மதிப்பில்லாதது அது!" குறும்புடன் கூறினான்.

முதலில் புரியாமல் விழித்தவள், சட்டென்று முகிலனின் கையைப் பற்றிப் புறங்கையில் மெதுவாகத் தன் இதழ் பதித்தாள்.

"ப்ச்... இவ்வளவுதானா? நான் நிறைய எதிர்பார்த்திருந்தேன்! ஏன்... மீசை குத்தும்னு பயமா இருக்கா? வேணும்னா அதை எடுத்திடவா?"

"ஊஹூம்... வேண்டாம்! இப்பல்லாம் எனக்கு உங்க கிட்ட ரொம்பப் பிடிச்ச..." சட்டென்று உதட்டைக் கடித்து நிறுத்தியவள் வேகமாக இறங்கினாள்.

"ஏய்... இரு."

அவள் கையைப் பிடித்துத் தடுத்தவன், "ஒழுங்கா சொல்ல வந்ததைச் சொல்லி முடிச்சிட்டுப் போ!" என்றான் விடாமல்.

"கையை விடுங்க... நான் போகணும்."

அவனிடமிருந்து கையை விடுவித்துக் கொண்டு இறங்கி வெட்கத்துடன் நிமிர்ந்தபோது அங்கு வாசலில் நின்று கொண்டிருந்த தங்கவேலுவின் முகத்தில், தாங்க முடியாத கோபம் தெரிந்தது.

அவனைக் கண்டதும் இறங்கி வந்த முகிலன், "ஏன் இன்னிக்கு நீங்க நம்ம வீட்டுக்கு வரலை? உங்களை எதிர்பார்த்துட்டிருந்தோம்" இயல்பாகக் கேட்டான்.

"ஏன் சார் பொய்யெல்லாம் சொல்றீங்க? என்னையா எதிர்பார்த்தீங்க... நான் ஒரு ஏழை வாத்தியாராச்சே?" நக்கலாகக் கூறினான்.

"இந்த மாதிரி 'சார்'ங்கிற மரியாதை எல்லாம் வேணாம். பெயர் சொல்லியே கூப்பிடலாம். எனக்கு எப்பவுமே, ஏழை பணக்காரங்கன்ற பாகுபாடே கிடையாது."

"ஓ... அதான் பாகுபாடே இல்லாம அந்தப் பைத்தியத்தை ஏதோ பண்ணிட்டு இப்ப நல்லவர் மாதிரி இல்லத்துல சேர்த்திருக்கீங்களா?" வார்த்தைகளில் திராவகத்தை வீசியபடி, மிருணாவையே வன்மத்துடன் பார்த்தான்.

உடனே கோபத்துடன் நிமிர்ந்தவள்; "மாமா! யார்கிட்ட என்ன பேச்சு பேசறீங்க? ஒருத்தர் நல்லது செஞ்சா, அதை இப்படித்தான் தப்பா பேசுவீங்களா? எனக்குத் தெரியும், அதுக்கு யார் காரணம்னு! தேவையில்லாமப் பேசி உங்களையே அசிங்கப்படுத்திக்காதீங்க!" தாழ்ந்த குரலில் சீறினாள்.

உடனே முகம் மாறி, விருட்டென்று அவன் தன்னுடைய பைக்கை எடுத்துக் கொண்டு சென்றான்.

முகிலனிடம் திரும்பியவள், "சாரி! அவருக்காக நான் உங்ககிட்டே மன்னிப்பு கேட்டுக்கறேன்" என்றபோது அவள் விழியோரங்களில் மெல்லிய நீர்க்கசிவு.

"மிருணா... நீ ஏன் அழுறே? எப்பவுமே, தப்பு பண்ணினவங்க அதை மத்தவங்க கண்டு பிடிச்சிடுவாங்களோங்கற பயத்துல ஏதாவது பேசத்தான் செய்வாங்க. அதைப் பெரிசா எடுத்துக்கக் கூடாது."

உடனே அதிர்ந்தவள், "உங்களுக்கு...?" கேள்வியாய் நிறுத்தினாள்.



"எனக்குத் தெரியும். உனக்குத் தெரிஞ்சா நீ வருத்தப்படுவேன்னுதான் சொல்லலை. அந்த எஸ்தரோட இவர் தப்பா பழகினது தெரிஞ்சு காசியண்ணன்தான் என்கிட்டே சொன்னாரு! விடு... உன் அக்காவுக்குத் தெரிய வேணாம்... பாவம் அவங்க!" என்றான்.

"தேங்க்யூ முகில்! என் குடும்பத்துக்காக இவ்வளவு அக்கறையா யோசிச்சுச் செயல்படுற உங்களை நினைச்சா எனக்கு ரொம்பப் பெருமையா இருக்கு! ஆனா சின்னத் தப்பைக்கூட நீங்க சகிக்கக்க மாட்டீங்கன்னு சொல்லுவாங்க. ஏன்...?"

விழிகள் சட்டென்று பனித்தன.

"ஏனா? எல்லாம் என் மனைவிக்காகத்தான்! அவ சந்தோஷமா இருந்தாத்தானே நான் நிம்மதியா இருக்க முடியும்!"

அவனுடைய பதில், மெல்லிய பூஞ்சிறகின் வருடலாய்!

'இதற்கு பதிலாக இவனுக்கு நான் என்ன செய்யப் போகிறேன்' என்று யோசிக்கும் போதே, அவனுடைய குரல் அவளைக் கலைத்தது.

"பொதுவா பெண்களை ஒரு புதிர்னு சொல்லுவாங்க! ஆனா என்னைப் பொறுத்தவரைக்கும் பொண்ணுங்கிறவ ஒரு புதையல் மாதிரி! தாய் நிலத்துல கிடைச்சாலும் உரிமை கொண்டாட முடியாம, வேற இடம் போற புதையல்!" அவன் வார்த்தைகள் மனதில் கல்வெட்டாய் பதிந்தன.

'உள்ளே புதைந்து போயிருந்த என் மென்மையான உணர்வுகளைப் புதையலாய்க் கண்டெடுத்துப் புதுப்பித்தவனோ நீ...' என்று அவனிடம் கேட்க வேண்டும் போல்

ஆனால் பேசுவதற்கு வார்த்தைகள் வராமல், தொண்டைக்குள்ளேயே சிக்கி மடிந்தன.

"நான் கிளம்பறேன் மிருணி!"

அவள் கையை மெல்ல அழுத்தி அவன் விடை பெற்ற போது, அவனுடைய ஸ்பரிசம் சிலிர்க்கச் செய்வதாய்!

காரின் வெளிச்சம் தூரத்தில் சென்று மறையும் வரை பார்த்துக் கொண்டு நின்று விட்டு உள்ளே வந்தபோது, உள் அறையில் மீனா அழுது கொண்டிருக்க, அப்பாவும் அம்மாவும் சமாதானப்படுத்திக் கொண்டிருந்தனர்.

"என்னம்மா... என்னாச்சு?" அவள் பதறிப்போய் கேட்டாள்.

"உங்க வீட்டுக்கு ஏன் போனான்னு எங்க கண்ணு முன்னாடியே அடிச்சி சித்ரவதை பண்ணிட்டுப் போறாருடி இவ புருஷன்!" கூறிய தேம்பாவனி தாங்க முடியாமல் விம்ம ஆரம்பித்தாள்.

தளர்ந்த நடையுடன் லிங்கம் அறையை விட்டுச் செல்ல, மீனாவை சமதானப்படுத்தி விட்டு வெளியே வந்தாள், அப்பா கண்மூடி சாய்ந்து அமர்ந்திருப்பது தெரிந்தது.

அவரருகில் சென்று "அப்பா!" என்றழைத்தபடி அவர் தோளில் சாய்ந்தபோது, அவள் தலையைப் பாசமாக வருடினார் அவர்.

"நீயாவது நிம்மதியா இருக்கணும்டா! ஒரு அப்பாவுக்கு வேற என்ன வேணும்? தன் குழந்தைங்க சந்தோஷமா இருக்கறதைப் பாக்கணும். அவ்வளவுதான்! மீனா விஷயத்துல நாம விசாரிக்காம தப்பு பண்ணிட்டோமோன்னு. ரொம்ப பயமாயிருக்கு" என்றார் சோகமாக.



"கவலைப்படாதீங்கப்பா... எல்லாம் சரியாயிடும்" என்றாள் அவள்.

"உன்கிட்டே ஒன்னு கேக்கறேம்மா! சின்ன மாப்பிள்ளை ரொம்ப அருமையானவரு. அவங்கம்மா கொஞ்சம் பணக்காரத் தோரணையில இருந்தாலும், நீ அவருக்காக அனுசரிச்சிட்டுப் போகணும் புரியுதா?" நெகிழ்ந்து போய் கேட்டார்.

"சரிப்பா... என்னால உங்களுக்கு எந்தப் பிரச்னையும் வராது. உங்க மாப்பிள்ளை வரவிடவும் மாட்டார்" என்று கூறி எழுந்தபோது, தனக்கு அவன் மேல் தகர்க்க முடியாத நம்பிக்கை வந்திருப்பது புரிவதாய்!

* * *

மறுநாளே, தங்கவேலுவிடம் பேசி சமாதானம் செய்து, மீனாவை அங்கு விட்டு வந்தார் லிங்கம்.

இப்போதெல்லாம் அடிக்கடி மிருணாளைப் பார்க்க வந்து விடுவான் முகிலன்.

அவனுடைய புல்லட்டின் ஓசை கேட்டாலே இப்போதெல்லாம் அவள் இதயம் படபடக்க ஆரம்பித்திருந்தது.

அவனுக்காகவே தன்னை அலங்கரித்துக் கொண்டு காத்திருப்பது, சுகமான ஒரு உணர்வாய்!

அவன் வந்தவுடனே டிபன், காபி சாப்பிட்டு விட்டு இருவரும் தோட்டத்திற்குச் சென்று விடுவார்கள்.

கிணற்று மேடையில் அமர்ந்து, எல்லா விஷயங்களையும் இயல்பாக அவனுடன் பகிர்ந்து கொள்ளும்போது மனதிற்குள் ஆச்சர்யம் ஊற்றெடுக்கும்.

ஆறு மாதத்திற்கு முன்னால், இவனுடன் தனித்து அமர்ந்து மனம் விட்டுப் பேசுவாய் என்று யாராவது கூறி இருந்தால் நம்பியிருப்போமா என்று, மனம் கேள்வி கேட்கும்.

முன்பெல்லாம், முகிலனைக் கண்டாலே தான் நடுங்கியதை நினைத்தால் இன்று சிரிப்பாய்!

திடீரென்று அவள் தனக்குள்ளேயே சிரிக்கவும், "ஏய்... என்ன தனக்குத் தானே சிரிக்கக்கறே? அதுக்குப் பேரு என்ன தெரியுமா?" சிறு கேலியுடன் கேட்டான்.

"ஒன்றுமில்லை... ஆறு மாசத்துக்கு முன்னாடி உங்களைப் பாத்தாலே பயந்து ஓடுவேன். இப்ப இப்படிப் பக்கத்துல உக்காந்து சிரிச்சிப் பேசிட்டிருக்கேனே அப்படின்னு நினைச்சேன்... அதான்!" என்றாள்.

"இப்ப நான் இல்லை பயந்துட்டிருக்கேன்! மனசுல ஆயிரம் ஆசை இருக்கு... ஆனா கிட்ட வந்தா அடிச்சிடுவியோன்னு பயமா இருக்கே!" என்றான் வேடிக்கையாக.

"ம்... அந்த பயம் இருக்கட்டும்."

ஒற்றை விரலைக் காட்டி கேலியாக மிரட்டிவிட்டு அவள் குறும்பாய்ப் புன்னகைக்க, சட்டென்று அந்த இடத்தை விட்டு எழுந்து நடக்க ஆரம்பித்தான் முகிலன்.

உதட்டிலேயே உறைந்து நின்ற சிரிப்புடன் அவனைத் தொடர்ந்தவள், "ஏன் திடீர்னு கிளம்பிட்டீங்க" என்றாள் சோர்வுடன்.

"இல்லை... ஒரு வேலை இருக்கு... இப்பத்தான் ஞாபகம் வந்தது!" - என்றபடி உள்ளே சென்று மாமனார், மாமியாரிடம் விடைபெற்று உடனே கிளம்பி விட்டான்.



அவன் வராத நேரங்கள், அம்மாவுடன் கதையளப்பதிலும், தூங்குவதிலும், பாடப் புத்தகங்கள் படிப்பதிலும் சென்றன.

ஆனால் மனம் மட்டும் அவன் வருகின்ற வழியை எதிர் பார்த்துத் தவிப்புடன் காத்திருக்க ஆரம்பித்தது.

* * *

ஆடி முடிந்து நல்லநாள் பார்த்து அவளை முகிலனின் வீட்டிற்கு விட்டுச் செல்ல வந்த லிங்கமும், தேம்பாவணியும் பலகாரங்களையும் சீர்களையும் சம்பந்தியிடம் அளித்தனர்.

தனிமையில் சுந்தரபாண்டியனிடம் பேசிய லிங்கம், "சம்பந்தி! எங்களால முடிஞ்ச அளவுக்கு சீர்களை செஞ்சிருக்கோம். உங்க வசதிக்கு இது குறைச்சல்தான்! தப்பா நினைச்சிக்கக்கூடாது." என்றார் மெல்லிய குரலில்.

"லிங்கம்! நான் இதெல்லாம் எதிர்பாக்கறதேயில்லை. மிருணாளினி இப்ப எங்க வீட்டுப் பொண்ணு. அவளுக்கு நீங்க செய்யறதிலே, நான் என்ன கணக்குப் பாக்கறது?" என்றார் பெருந்தன்மையுடன்.

ஆனால், தமிழரசியின் முகம் சுருங்கிப் போயிருந்தது.

எப்போதும் காலையில் ஒன்பது மணிக்குச் சரியாகக் கிளம்பி விடுபவன், அன்று தன் பெற்றோருக்காக வேலைகளை ஒதுக்கிவிட்டு வீட்டிலிருந்து அவர்களிடம் அன்பாகப் பேசிக் கொண்டிருந்தது மிருணாளினிக்குப் பெரும் இதமாய்!

ஆனால் அன்றிரவு, தரையில் பாய் விரித்து அவன் கீழே படுத்ததும் அந்த இதம் பெரிதும் தொலைந்து போனது அவளுக்குள்!

மறுநாள் காலையில், சமையல்காரம்மாவின் உறவினர் இறந்து விட்டதால், அவர் ஊருக்குச் செல்லும்படியானது. காலை டிபன் மட்டுமே முடிந்திருந்தது.

முகிலன் வெளியே செல்லும்போது, "என்னம்மா? மதியத்துக்கு எப்பவும் போல சாப்பாடு மெஸ்ஸில சொல்லிடவா?" என்று கேட்டான்.

அவரும் சரியென்று கூறிவிட்டுச் செல்ல, "ஏன்? சமையல்காரம்மா இல்லைன்னா, வீட்டுல சமைக்க மாட்டீங்களா?" மெதுவாகக் கேட்டாள் அவள்.

"அம்மாவுக்கு முடியாது! பி.பி., ஷுகர் எல்லாம் அதிகம்! சமையலறையில ரொம்ப நேரம் நிக்க முடியாது. அதனால மெஸ்ஸில சொல்லி வாங்கிடுவோம்."

"இன்னிக்கு நான் சமைக்கவா?"

அவன் ஆர்வத்துடன் கேட்க, "உன்னால முடியுமா? பத்துப் பேருக்குச் செய்யணுமே?"

"ம்... செய்வேன்! கூட துணைக்கு ஹெல்ப் பண்ணத்தான் செல்வாசி இருக்காங்களே!" என்றவள் "ஒரு நிமிஷம்! உங்களுக்கு என்ன பிடிக்கும்?" மெதுவாகக் கேட்டாள்.

"எனக்கு என்ன பிடிக்கும்னு சொல்லிடுவேன். ஆனா உனக்குக் கோபம் வந்துடும்."

"இல்லை... வராது! நான்-வெறு சமைக்கறதுக்கு எப்படியாவது நான் கத்துக்கறேன்."

அவசரமாகக் கூறியபோது, "நான் அதைச் சொல்லலை! நீ என்ன செஞ்சாலும் எனக்குப் பிடிக்கும்! நான் வரேன்" என்று கிளம்பினான்.



நேரே மாமியாரிடம் சென்றவள், "அத்தை! உங்களுக்கும் மாமாவுக்கும் என்ன காய் பிடிக்கும்னு சொன்னீங்கன்னா நானே இன்னிக்கு சமைச்சிடறேன்" என்றாள்.

"அதெல்லாம் வேணாம்! தம்பி மெஸ்ஸில சொல்லிடும்." என்று மறுத்தவரிடம், "இல்லத்தை! நான் சமைக்கறதா அவர்கிட்ட சொல்லிட்டேன்." - மெதுவாகக் கூறினாள்.

"மாமாவுக்குக் கீரை வேணும்... ஒரு கூட்டு, ரசம் வச்சிடு போதும். கஷ்டப்படுத்திக்க வேணாம். ரெண்டு நாளிலே மாதவி வந்திடுவா!"

'சரி'யென்றபடி சமையலறைக்குள் சென்றவள், செல்வாசியை உதவிக்குச் சேர்த்துக் கொண்டு சமைக்க ஆரம்பித்தாள்.

வெங்காய சாம்பார், புடலங்காய் கூட்டு, கீரை, உருளை வறுவல், ரசம் எல்லாம் செய்து முடித்து விட்டு, அவளை அந்த இடத்தைச் சுத்தம் செய்யும்படிக் கூறியவள், மாடிக்குச் சென்று முகம் கழுவிக் கீழே வந்தாள்.

அன்று சாப்பிட்டுவிட்டு ஆண்கள் இருவரும் அவளை வெகுவாகப் புகழ, தமிழரசி மட்டும் அமைதியாகவே சாப்பிட்டாலும், மிருணாவுக்கு மிகவும் மகிழ்ச்சியாய்!

தன்னால் அவனுக்கு இந்த சந்தோஷத்தையாவது அளிக்க முடிந்ததே என்று பரவசமாய்!

தான் ஏன் அவனிடம் இன்னும் விலகியே இருக்கிறோம் என்ற கேள்விக்கு, அவளிடம் விடைதான் இல்லை.

சிறு வயதிலிருந்தே அவன் மேல் கண் மூடித்தனமாக வளர்த்திருந்த பயமும், வெறுப்பும் இப்போது அவனுடன் பழகப் பழகச் சூரியனின் சுவாசச் சூட்டினால் மறைகின்ற பனித்துளியைப் போல் மெல்ல மெல்ல விலகினாலும் ஏனோ முழுதாய் ஒரு நம்பிக்கை மட்டும் வர மறுத்தது



## 9

ஒரு நாள் மதியம் அவளுக்கு ஃபோன் வந்திருப்பதாக வேலையாள் கூறிய போது எடுத்தால், லிங்கம்தான் பேசினார்.

"மிருணா! பெரிய மாப்பிள்ளைக்கு ஆக்சிடெண்ட் ஆகி, ஆஸ்பத்திரியில சேர்த்திருக்கோம்மா! நான்தான் கூட இருக்கேன். மீனா பாவம், ரொம்ப அழறா! நீ கொஞ்சம் வந்து அவளை அழைச்சிட்டுப் போறியா? சின்ன மாப்பிள்ளைக்கு இப்பத்தான் 'செல்'லிலப் பேசினேன்" - என்றார் பதட்டத்துடன்.

"நான் உடனே வரேம்ப்பா" என்றவள் எந்த மருத்துவமனை என்று தெரிந்துகொண்டு வைத்தபோது, மீனாவை நினைத்து மனதில் எழுந்த வேதனை, கண்ணீர்த் துளிகளாய்ச் சிதறின.

அவள் அழுவதைக் கண்டு அருகில் வந்த தமிழரசி, "எங்கேருந்து ஃபோன் வந்தது? ஏன் அழறே?" - என்று அவசரமாகக் கேட்டார்.

"அத்தை! எங்க அக்கா வீட்டுக்காரருக்கு ஆக்சிடெண்ட் ஆயிடுச்சாம். அப்பாதான் பேசினாங்க. அக்காவை நினைச்சா ரொம்பக் கஷ்டமா இருக்கு. நான் போகணும்" கண்ணீருடன் கூறினாள்.

"அப்படியா? அடப்பாவமே... முன்னாடி குழந்தை இறந்தது. இப்ப இப்படி ஒரு கஷ்டம்! நீ உடனே தம்பிக்குப் போன் பண்ணி வரச் சொல்லு."

அவர் கூறும்போதே, வாசலில் கார் சப்தம் கேட்டது.

வேகமாக உள்ளே வந்த முகிலன், "அழக்கூடாது மிருணி... தைரியமா இருக்கணும்! வா... போகலாம்...



அம்மா! கணக்குப்பிள்ளை வருவார். திராட்சைத் தோட்டத்துக்கு மருந்தடிக்கப் பணம் குறையுதுன்னாரு... பத்தாயிரம் ரூபா எடுத்து அவர்கிட்டக் கொடுத்துடுங்க" - அவசரமாகக் கூறிவிட்டுக் கிளம்பினான்.

காரில் செல்லும்போது அழுதுகொண்டே வந்தவளிடம், "மிருணி! உங்க அக்காவுக்கு நீ தைரியம் சொல்லுவியா... அதை விட்டுட்டு நீயும் சேர்ந்து அழுதா அவங்க பயந்திட மாட்டாங்க? முதல்லே கண்ணைத் துடை!" என்று தன் கர்ச்சிப்பை எடுத்துக் கொடுத்தான்.

மருத்துவமனைக்குச் சென்று பார்த்தபோது, தங்கவேலுவுக்கு கையிலும் இடுப்பிலும் நன்றாக அடிபட்டிருப்பது தெரிந்தது.

அழுது கொண்டிருந்த மீனாவைத் தேற்றியவள், "நீ கவலைப்படாதேக்கா! கடவுள் உன்னைக் கைவிட மாட்டார்" என்று ஆறுதல்படுத்தினாள்.

"எவ்வளவு செலவாகும்னு வேற தெரியலையே?"

அவள் தவிப்புடன் கூறியபோது அதைக் கேட்டுக் கொண்டிருந்த முகிலன், "ஒரு நிமிஷம்! அதைப்பத்தி நீங்க கவலைப்படாதீங்க... நாங்க எல்லாம் பாத்துக்கறோம். அவரு எனக்கு அண்ணன் மாதிரிதான்" என்று கூறியபோது, உடைந்து போய் இன்னும் அதிகமாக அழ ஆரம்பித்தாள் மீனா.

அவளை வீட்டில் விட்டுவிட்டுப் புறப்பட்டனர்.

தங்கவேலு உடல்நிலை தேறி மருத்துவமனையிலிருந்து திரும்பி வர, இரண்டு வாரங்களாகின.

அவனுக்கான எல்லாச் செலவுகளையும் லிங்கமே பார்த்துக் கொள்வதாகக் கூறி விட்டார்.

ஒரு மாப்பிள்ளைக்காக இன்னொரு மாப்பிள்ளையிடம் கடன் பெற, அவர் மனம் ஒப்புக் கொள்ளவில்லை.

ஆனால், தெரிந்த டாக்டரென்பதால், அவரிடம் பேசி மருத்துவச் செலவில் ஒரு பகுதியை குறைக்கச் செய்திருந்தான் முகிலன்.

* * *

**மா**தக் கடைசியில் தன் பீரோவிலிருந்த பணத்தைக் கணக்குப் பார்த்த சுந்தரபாண்டியன், பத்தாயிரம் ரூபாய் குறைவதைக் கண்டு முகிலனிடம் கேட்டார்.

"முகிலா! என் பீரோவிலிருந்து எதுக்காவது பத்தாயிரம் ரூபா எடுத்துக் குடுத்தியா? கணக்குல பணம் குறையுதே!"

"இல்லியேப்பா!" என்று அவன் கூறிக் கொண்டிருக்கும் போதே அங்கு வந்த தமிழரசி "என்னங்க... ஏதாவது வேணுமா?" என்றார்.

"பீரோல வெச்சிருந்த பணம் கொஞ்சம் குறையற மாதிரித் தெரிஞ்சது... அதான் கேட்டுட்டிருந்தேன்" யோசனையுடன் கூறினார் பாண்டியன்.

"ஒருவேளை நம்ம மருமகப் பொண்ணு எடுத்து அவங்க மாமாவோட வைத்தியச் செலவுக்குக் கொடுத்திருப்பாளோ?"

தணிந்த குரலில் தமிழரசி கேட்டபோது, முகிலனுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

"அம்மா... என்ன பேசறீங்க? மாமா, என்கிட்டே ஒரு பைசாகூட வாங்க மாட்டேன்னு சொல்லிட்டாங்க! எப்படிப் பட்ட குடும்பம் அது! மிருணி நீங்க பேசியதைக் கேட்டா எவ்வளவு வருத்தப்படுவா? எதையும் பேசறதுக்கு முன்னாடி யோசிச்சுப் பேசுங்க."



தாழ்ந்த குரலில் சீறிவிட்டுத் திரும்பியபோதுதான், அறை வாசலில் அசைவற்று நின்றிருந்த அந்தப் பாதங்களைக் கவனித்தான் அவன்.

மெதுவாகப் பார்வையை உயர்த்தியபோது, காபி டம்ளர்களை ஏந்திய ட்ரேயுடன் சிலையாகச் சமைந்திருந்தவளின் விழிகளில், காயம்பட்ட தடம் மிக ஆழமாய்!

அடுத்த நிமிடம் வேகமாக நடந்து வந்து அங்கிருந்த டீப்பாயில் அந்த ட்ரேயை வைத்தவள், உடனே வெளியில் சென்று விட்டாள்.

தன் மீது அநியாயமாகக் குற்றம் சுமத்திய மாமியாரை நினைத்து மனம் சிதறி விழிகள் நிறைந்தன. ஏனோ உடலிலிருந்த பலம் முழுவதும் உறிஞ்சப்பட்டது போல் ஒரு தளர்வு நிலை வந்தது.

கட்டிலில் அமர்ந்து கண்களை இறுக மூடி அழுகையை அடக்கியபோது, அருகில் வந்தது அழுத்தமான காலடியோசை!

"மிருணி!" அவனுடைய ஆழ்ந்த குரல் காயம்பட்ட மனதிற்கு மயிலிறகாக ஒத்தடம் தருவதாய்!

அவள் மெதுவாகக் கண்களைத் திறந்தபோது, "சாரி! அம்மா ஏதோ தெரியாமப் பேசிட்டாங்க! எனக்காக அதை நீ மனசில வெச்சிக்கக் கூடாது. அம்மா பேசினது தப்புதான். நான் உன்னை சமாதானப்படுத்தணுமேன்னு உடனே இங்கே வந்துட்டேன். அம்மாகிட்ட இதுபத்தி பேசறேன். இனிமே, இந்த வீட்டுலே யாருமே உன் மனசு புண்படற மாதிரி நடந்துக்க மாட்டாங்க" வருத்தத்துடன் கூறினான்.

"நான் புதுசுதானே... அதுதான், என்னைப் பத்தி அவங்க சரியா புரிஞ்சுக்கலை... பரவாயில்லை! அத்தை தானே சொன்னாங்க!" என்றபோது அவள் குரல் கம்மியிருந்தது.

அப்போது, அறைக்கதவை மெலிதாகத் தட்டிவிட்டு உள்ளே வந்த சுந்தரபாண்டியன்,

பின்தொடர்ந்து வந்த தமிழரசியிடம், "பாத்தியா... உன் மருமகளோட பெருந்தன்மையை! என்ன சொல்லுது பார் அந்தப் பொண்ணு! எவ்வளவு பெரிய குற்றத்தை அவள் மேல சுமத்தினே? போய் அவளைச் சமாதானப் படுத்து!" என்றபடி வெளியில் சென்றார்.

"அன்னிக்கு அந்தப் பணத்தை பூச்சி மருந்து அடிக்க கணக்குப்பிள்ளைகிட்டே நான்தான் எடுத்துக் கொடுத்திருக்கேன், மறந்திட்டேன்!" என்றார் தமிழரசி தர்ம சங்கடத்துடன்.

அவளுடைய தோளைப் பிடித்து அழுத்திய கைகளின் மௌனச் செய்தியும், அவர் விழிகளில் தெரிந்த சங்கடமும், அவளை அமைதிப்படுத்தின.

"நீங்க என்னைப் பத்திப் புரிஞ்சுக்கிட்டா அதுவே போதும்" என்றாள் மிருணாளினி, மென்மையாக.

பிறகு அவர் கீழே இறங்கிச் செல்ல, பிறருக்காக விட்டுக் கொடுப்பதில் கூட, ஒரு சுகமிருப்பதை, அன்றுதான் உணர்ந்தாள் மிருணா.

முகிலனிடம் திரும்பியபோது, வார்த்தைகளில் வராத பெரும் நன்றியுணர்ச்சி, அவள் விழிகளில் தெரிவதாய்!

◆ ◆ ◆



**மா**லையில் வீட்டிற்கு வந்த முகிலன், பெரும் யோசனையிலிருப்பது போலத் தெரிந்தது.

காபி, டிபன் கொடுத்துவிட்டு மாடிக்குச் சென்றபோது அவளைப் பின் தொடர்ந்து வந்தவன், "மிருணி! உன்கிட்ட ஒரு விஷயம் பேசணும்" என்றான்.

கேள்வியாகத் திரும்பியவளிடம், "இன்னிக்கு டாக்டர் புருஷோத்தமன் எனக்கு போன் பண்ணி இருந்தாரு. உங்க மாமாவுக்கு இடுப்புல அடிபட்டதில ஏதோ நரம்பு பாதிக்கப்பட்டு அவரு இனிமே இயல்பா... ம்... அவருக்கு இனிமே குழந்தையே பிறக்க வாய்ப்பில்லைன்னு சொன்னாரு. கஷ்டமா இருந்தது! ஆனா, உன்கிட்டே இதை மறைக்க வேணாம்னு தோணுச்சு!" மெதுவாகக் கூறினான்.

இதயம் மீனாவிற்காக அழ ஆரம்பிக்க, அதன் தொடர்ச்சியாய் இமைகள் நனைந்தன.

"இதை யார்கிட்டேயும் சொல்ல வேணாம்... சொல்லணும்கிற அவசியம் வந்தா அப்பப் பாத்துக்கலாம்" என்று கூறிவிட்டு, மௌனமாக அவன் அமர்ந்திருக்க - மிருணாவின் மனதிற்குள் பெரும் அதிர்வுகள்!

வாழ்க்கையில் சில கேள்விகளுக்கு, விடைகள் புதிர்களாய்!

உடனே அந்தப் பெண் எஸ்தரின் நினைவு வர, மீனாவிற்கு குழந்தை இறந்து பிறந்த அன்றே, அவளுக்குள் இந்தக் குழந்தையும் ஜனித்திருக்குமோ என்ற கேள்வி, நெருடலாய்!

இப்போது எஸ்தருக்கு ஏழு மாதமாவது இருக்குமே என்ற ஞாபகம் உள்ளத்தில் மையம் கொண்டு பல குழப்பங்கள் மனதைத் தாக்க, தலை விண்ணென்று தெறித்தது.

வாழ்க்கைப் பாதை தெள்ளிய நீரோடையாய் தடம் பதித்துச் சென்றது.

தலைதீபாவளியன்று முகிலனின் வீட்டில் பூஜையை முடித்துவிட்டு அவள் வீட்டிற்குச் சென்று கொண்டாடிய போது, மனம் மகிழ்ச்சியில் ஆர்ப்பரித்தது.

லிங்கம் தலைதீபாவளிச் சீரையும் எந்தக் குறையுமின்றி நிறைவுடனே செய்து முடித்தார்.

டிசம்பரில் செமஸ்டர் எக்ஸாம் வருவதால், படிப்பில் கவனத்தைச் செலுத்த ஆரம்பித்தாள் மிருணா.

அன்றும் காலையில் முகிலன் கிளம்பிச் சென்றதும் அது போல் தங்கள் அறையில் அவள் படித்துக் கொண்டிருந்த போது பதினோரு மணியளவில் வேகமாக உள்ளே வந்தான் முகிலன்.

“மிருணி... அந்த எஸ்தருக்குப் பெண் குழந்தை பிறந்திருக்காம். ஆனா, அந்தப் பொண்ணு பாவம் இறந்து போயிடுச்சின்னு இப்பத்தான் போன் வந்தது. என்ன செய்யலாம்? கடைசிச் செலவை நான் ஏத்துக்கறேன்னு ஃபாதர்கிட்ட சொல்லிட்டேன்.” யோசனையுடன் கேட்டான்.

சட்டென்று அவள் விழிகள் நிறைந்து குளம் கட்டின.

“ப்ச்... பாவம்ங்க அந்தப் பொண்ணு! எனக்கு ஒண்ணு தோணுதுங்க. நாம நேரா எங்க அப்பாகிட்ட போய் முதல்லே இதைப்பத்திப் பேசுவோம். அப்புறம்... அக்கா விருப்பப்பட்டா, இந்தக் குழந்தையை லீகலா தத்தெடுத்துக்கட்டும். ஒத்துக்கலைன்னா மாமாவைப்பத்தி சொல்லிச் சம்மதிக்க வைக்க வேண்டியதுதான்.”



“சரி... வா! ஆனா, நீதான் பேசணும்... மாமாவுக்கு ஹார்ட் ப்ராப்ளம் எதுவும் இல்லையே? தங்கவேலுவுக்கு இனிமே குழந்தை பிறக்காது... ஆனா, எஸ்தருக்குப் பிறந்திருக்கற குழந்தைக்கு அப்பா அவர்தான்னு தெரிஞ்சா அதிர்ச்சியா இருக்குமே!”

“அதுக்காகச் சொல்லாம இருக்க முடியாதே! இந்த விஷயத்துல அவர்கிட்டேயும் அக்கா - மாமாகிட்டேயும் தானே யோசனை கேட்டாகணும்!” என்றபடி உடை மாற்றிக் கிளம்பினாள் மிருணா.

ஆனால், வீட்டிற்குச் சென்ற பிறகு, அவரிடம் இதைப் பற்றி எப்படிப் பேசுவது... என்ன கூறுவதென்று புரியாமல் தவித்தவள், அம்மாவைப் பின்புறம் அழைத்துச் சென்றாள்.

மெதுவாக, மீனாவிற்கு பிரசவவலி எடுத்த அன்று, அவள் வீட்டில் தான் கண்ட துரோகத்தையும், விபத்தில் தங்கவேலுவுக்கு நேர்ந்த இழப்பையும் கூறியபோது, எதையுமே நம்ப முடியாத அதிர்ச்சியுடன் உடைந்து போனார் தேம்பாவணி.

“அம்மா! இப்ப அந்த எஸ்தருக்குக் குழந்தை பிறந்திருக்கு! அது நம்ம மாமாவோட குழந்தைன்னு, இப்ப நமக்கு மட்டும்தான் தெரியும். அந்தப் பொண்ணு பாவம் இறந்துடுச்சி! ஒரு அநாதைக் குழந்தையைத் தத்தெடுத்த மாதிரி, இப்போ அதை அக்காவுக்கு அடாப்ட் பண்ணிடலாமே? அதான் உங்க ரெண்டு பேர்கிட்டேயும் முதல்லே யோசனை கேக்கலாம்னு வந்தோம்!”

வெகுநேரம் குலுங்கிக் குலுங்கி அழுதவர், “நம்ம குடும்பத்துக்கு மட்டும் ஏன்டி இந்த மாதிரி சோதனை

எல்லாம்! பயங்கரக் கதை மாதிரி இருக்குடி மிருணா - நீ சொல்றதைக் கேட்டா! மீனா இதைத் தாங்குவாளா... எப்படி இதைப்பத்தி அவகிட்டப் பேசறது?'' - கண்ணீருடன் கூறினார் அவர்.



## 10

தேம்பாவனியை சமாதானப்படுத்தி உள்ளே அழைத்து வந்த மிருணா விங்கத்திடம் விபரங்களைக் கூற, ஓய்ந்து போனார் அவர்.

உடனே மீனாவிற்கு ஃபோன் செய்து அவளை வீட்டிற்கு வரும்படிக் கூறியவரின் முகத்தை வேதனைகளும் துயரங்களும் வெகுவாய் ஆக்ரமித்திருந்தன.

முகிலன் அவரிடம், ''நீங்க மனசைத் தளர விட்டுடாதீங்க மாமா. தைரியமா இருங்க! தங்கவேலு அண்ணன் என்ன சொல்றாருன்னு பாப்போம். நாங்க இங்கே இருந்தா அவங்களுக்கு தர்மசங்கடமா இருக்கும். நீங்களே மெதுவா அவங்களோட பேசுங்க. கலந்து பேசி முடிவெடுங்க! நாங்க இல்லத்துக்குப் போய் குழந்தையைப் பாத்துட்டு அப்புறமா ஃபோன் பண்றோம்'' என்று எழுந்தான்.

உடனே எழுந்த மிருணாவும், அம்மா அப்பாவிடம் விடைபெற்றுக் கிளம்பினாள்.

நேரே கருணை இல்லத்திற்குச் சென்று ஃபாதர் மைக்கேலைப் பார்த்தபோது, சர்ச்சின் பின்புறமிருந்த கல்லறைக்கு எஸ்தரின் உடலை இப்போதுதான் எடுத்துச் சென்றதாகக் கூறி, அவர்களை அங்கு அழைத்துச் சென்றார்.



மனிதனின் இறுதித் துயிலிடம்!

சுற்றிலும் மனித இனத்து மூதாதையரின் உறங்கலுக்கு சாட்சியாய், நிறையக் கல்லறைகள்!

இறந்த பின்னும் மண்ணுக்குள் புதைந்திருக்கும் மனித சாட்சியாய், கர்ப்ப மேடுகளாகப் புதைமேடுகள்!

அங்கு மழைக்காலச் சகதிகளோடு, சலனமின்றி சகலமும் நோக்கும் காகக் கூட்டம்.

'நாளை, இம்மாதிரி ஒரு சுடலையே நான் துயில் கொள்ளப் போகும் இடமோ?' என்று தோன்றும் போதே, சட்டென்று அவளுக்குள் ஒரு குளிர் பரவியது.

அங்கு எஸ்தரின் இறுதிச் சடங்குகளை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இறந்த பிறகும் விடாமல் தொடர்கின்ற சுமைகளாய், அந்தப் பெண்ணின் உடல்மேல், மலர் மாலைகள் தெரிந்தன.

பரிதாபத்துடன் அவளைப் பார்த்துவிட்டு, கருணை இல்லத்துக்குள் சென்று குழந்தையைப் பார்த்தனர்.

தொட்டிலில் படுக்க வைக்கப்பட்டிருந்த அந்தக் குழந்தை, தங்கவேலுவை சிறிதாய் செய்து வைத்தாற் போல் கைகால்களை அசைத்து, மிரள மிரளப் பார்த்துக் கொண்டிருந்தது.

உயிர்ப் பூக்களைப் பறிக்கின்ற காலனுடைய கரங்களின் வேகம் அதிகரித்தாலும், காலச் செடியில் மீண்டும் துளிர்த்துக் கொண்டே இருக்கும் ஜனனத் தளிர்களுக்கு எடுத்துக்காட்டாய், எஸ்தரும், அந்தக் குழந்தையும்!

சிறு குழந்தைகளைத் தூக்கிப் பழக்கமில்லாததால், இளஞ்சிவப்பு நிறத்திலிருந்த பிஞ்சு விரல்களை மெதுவாக

வருடியபோது, அவளுக்கு மென்பஞ்சு மேகத்தைத் தீண்டியதைப் போல் ஒரு உணர்வு!

திடீரென்று குழந்தை அழ ஆரம்பித்ததும், மனதில் ஒருவித வெற்றிடம் வந்து வியாபித்தது.

ஆயாம்மா சிறு பாட்டிலில் புகட்டிய பாலை பசியுடன் தடுமாறியபடி குழந்தை உறிஞ்சிக் குடித்தபோது, மீனாவின் குழந்தை 'ஐம்சத்வனி'யே உயிர் பெற்று வந்ததைப் போல் ஒரு சிலிர்ப்பு வந்தது.

திரும்பி வரும்போது, இறுக்கமாயிருந்த மனதிற்குள் துன்ப வடுக்கள் அதிகம் தெரிந்தன.

அன்று மாலையில் வீட்டிற்கு ஃபோன் செய்து பேசிய போது, விஷயம் சிலவற்றை மீனாவிடமே கொடுத்து விட்டார்.

"அக்கா! இப்பத்தான் நீ தைரியமா இருக்கணும். உனக்கு எல்லா விஷயமும் தெரிஞ்சிருக்கும்னு நினைக்கிறேன். முக்கியமா, நீதான் இதிலே ஒரு நல்ல முடிவா எடுக்கணும்."

மிருணா தைரியமூட்டும் குரலில் கூறினாள்.

"மிருணா! எனக்கு, உன் மாமாவோட கேரக்டர் முன்னாடியே தெரியும். உனக்குத் தெரியக்கூடாதுன்னு நான் நினைச்சிட்டிருந்தேன். நீ நேரிலேயே பாத்திருக்கே. எப்படித் துடிச்சிருந்திருப்பே! உன் கணவருக்குத்தான் நான் இப்ப நன்றி சொல்லணும். நீ போய் அந்தக் குழந்தையைப் பாத்தியா?"

மீனாவின் குரலிலேயே அவள் பெரிதும் ஓய்ந்திருப்பது தெரிந்தது.



"நான் பார்த்தேன்க்கா... அப்படியே மாமா மாதிரியே இருக்கு! எனக்கு அந்த நிமிஷம் என்ன தோணுச்சு தெரியுமா? நம்மளை விட்டுத் தொலைஞ்சு போன குழந்தை ஐம்சத்வனியே, நமக்குத் திரும்பக் கிடைச்சிட்ட மாதிரி இருந்தது. மாமாவோட கலந்து பேசி முடிவு பண்ணுக்கா... அவர் என்ன சொல்றாரு?"

"ம்... அவர் என்னிக்குத்தான் செஞ்ச தப்பை ஒத்துக்கிட்டிருக்காரு? 'இதுக்கு நான் காரணமில்லை'ன்னு அடிச்சிச் சொன்னாரு. அப்புறம் உங்க வீட்டுக்காரரைப் பத்தி அசிங்கமாப் பேசினாரு! எங்க எல்லாருக்கும் கோபம் வந்துடுச்சி. உடனே அப்பா, 'குழந்தைக்கு டி.என்.ஏ. டெஸ்ட் பண்ணினா, உண்மை தெரிஞ்சுடும்'னு சொன்னாங்க. உடனே முகம் வெளிறிப் போய், 'அந்தக் குழந்தையோட வரதா இருந்தா, நீ என் வீட்டுக்கு வராதே'ன்னு கோபமா கத்திட்டுப் போயிட்டாரு!" - என்றாள் ஒரு பெருமூச்சுடன்

"நீ கவலைப்படாதேக்கா! நான் இவரை விட்டுப் பேசச் சொல்றேன். உனக்கு இந்த 'அடாப்ஷன்'ல சம்மதமா... அதை முதல்லே சொல்லு. இல்லைன்னா அந்தக் குழந்தையை வளர்க்கற செலவைத் தானே ஏத்துக்கறதா முகில் சொல்லிட்டாரு. அதான் கேக்கறேன். நல்லா யோசிச்சு அப்புறமா சொல்லுக்கா!"

"இதிலே யோசிக்கறதுக்கு எதுவுமே இல்லை. நான் தீர்மானம் பண்ணிட்டேன் மிருணா! நானும் ஒரு வேலைக்குப் போயிட்டு, அந்தக் குழந்தையையும் வளர்க்கலாம்னு முடிவு பண்ணிட்டேன். அம்மா வீட்டோடயே தான் இருக்கப் போறேன்" சோர்வுடன் கூறினாள் மீனா.

"அக்கா! இப்போ அவசரப்பட்டு முடிவெடுத்துட்டு, அப்புறம் நீ வருத்தப்படக் கூடாது."

"அவர் பண்ணின தப்பு நான் பாவம் சுமக்காம, ஒரு குழந்தையை என் மடியில சுமக்கற பாக்கியத்தைக் கடவுள் எனக்குத் தந்திருக்காரேன்னு சந்தோஷப் படறேன். நான் டெலிவரிக்கு வந்தப்புறமா, புதுசா ஒரு டீச்சரோட தொடர்பு ஏற்படுத்திக்கிட்டு, இப்ப அவளோட குடித்தனமே பண்றதா அவர் கூசாமச் சொல்றாரு. அவர் இனிமே திருந்துவாருன்ற நம்பிக்கை எனக்கு இல்லை. எல்லாம் கானல் நீராப் போச்சு!" அவள் குரல் உடைந்தது.

பிறகு அவளுடன் பேசிய லிங்கமும், மீனா எடுத்த முடிவு தான் சரி என்று உறுதியாகக் கூறினார். மனம் முழுவதும் வேதனையும் கவலையும் நிறைந்து, இதயம் இரும்புக் குண்டை வைத்தாற்போல் கனத்தது.

அப்போது உள்ளே வந்த முகிலன், "என்ன மிருணி! வீட்டுக்குப் பேசினியா? உங்க அக்காவும் மாமாவும் என்ன முடிவெடுத்திருக்காங்களாம்?" என்றான்.

எல்லா விஷயங்களையும் கூறியவள், "இப்போ என்ன முகில் செய்யறது? அக்கா ரொம்பத் தீர்மானமா இருக்கா!" என்றாள் மெல்லிய குரலில்!

யோசனையுடன், "சரி! நாளைக்கு நான் உன் மாமாவோடப் பேசிப் பாக்கறேன். ரெண்டு பேருமா சேர்ந்து குழந்தையைத் தத்தெடுத்து வளர்த்தா ரொம்ப நல்லதுன்னு சொல்லிப் பாக்கறேன்... பார்ப்போம், அவர் என்னதான் சொல்றாருன்னு! அப்புறம்... நாளைக்கு அப்பாவும் அம்மாவும் ஒரு கல்யாணத்துக்காக ஊருக்குப் போறாங்க.



நீ வேணும்னா உங்க வீட்டுக்குப் போய் தங்கிட்டு வரியா?" என்றான்.

"இல்லைங்க! அப்புறம் உங்களை யார் கவனிச்சிப்பாங்க! அப்புறமா அத்தை வந்தப்புறம், நான் போறேன்."

முதன் முதலாகத் தனக்காகவென்று யோசித்து அவன் கூறிய ஒவ்வொரு வார்த்தையும், அவளுக்குள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின.

மனதிற்குள் நேச மின்னல்கள் மின்ன, அவன் புறம் திரும்பியவளின் பார்வையில், சிநேகத்தையும் மீறிய ஏதோ ஒன்று தெரிவதைப் போல்!

அந்த நிமிடம், அவன் விழிகள் அவளுடைய நெஞ்சக் கூட்டைத் துளைத்து இதயத்தைத் தீண்ட, மிருணாவின் மனதிற்குள் சுகமான நேச மழைச்சாரல்!

திடீரென்று எங்கிருந்தோ ஒலித்த அந்தப் பாடல், சூழ்நிலையை இன்னும் இதமாக்குவதாய்!

"தொட்டுத் தொட்டு என்னை, வெற்றுக் களிமண்ணை

சிற்பமாக யார் செய்ததோ?"

தன்னைத் தொடாமலே, அவனுடைய செயல்களாலும், அன்பினாலும், தன் மனதைக் காதல் உளியால் செதுக்கி, தனக்குள் அவன் உருவையே சிற்பமாக முகிலன் வடித்திருப்பது அவளுக்கு இன்று புரிவதாய்!

'காதல் அழகை மட்டும் பார்ப்பதில்லை... அகத்தையும் பார்க்கிறது' என்று உணர்த்தியவனிடம், மறுப்பாய் இதயக் கதவை மூடி வைத்த நிஜம் புரிந்து, மனதில் பெரும் வலி எழக் கண்களை இறுக மூடினாள் அவள்.

"என்னாச்சு மிருணி? தலைவலிக்குதா... படுத்துக்க! இந்தா தைலம்... நீயே தடவிக்கறியா? நான் கொஞ்சம் கணக்குப் பாக்க வேண்டியிருக்கு! பக்கத்து ரூம்ல போய் பாக்கறேன்."

மென்மையாகக் கூறியபடி அவன் எழுந்து செல்ல, தவித்துப் போனாள் அவள்.

தன் நிழலாய்... துணையாய் கூடவே வந்து, இதயத்தில் புகுந்து, கனவுகளில் கலந்து, தன் நினைவையே மறக்கச் செய்தவன் இன்று உறக்கத்தையும் பறித்துக் கொண்ட மாயமும், அவன் நேசமும் புரிந்து, மனம் அலைபாய ஆரம்பித்தது.

* * *

ஒரு நாள் அவனுக்குப் பிடித்த மாதிரி கோழிக் குழம்பு வைத்திருப்பதாகக் கூறினார் சமையல்காரம்மா!

அவனுக்காகத் தானும் அசைவம் சாப்பிட ஆரம்பித்தாலென்ன என்று தோன்ற, ஒரு கரண்டியில் எடுத்து அதை மெதுவாகச் சுவைத்துப் பார்த்தபோது, அடிவயிற்றிலிருந்து குமட்டிக் கொண்டு வர, ஓடிச் சென்று வாந்தியெடுத்தாள் மிருணா.

சப்தம் கேட்டு அங்கு வந்த தமிழரசி, உடனே ஓடிச் சென்று தன் மகனுக்குப் போன் செய்தார்.

"முகிலா! நீ உடனே கிளம்பி வீட்டுக்கு வா... ஒரு நல்ல சேதி இருக்கு. இப்பவே வரணும்!" என்று வைத்தார்.

ஒன்றும் புரியாமல் அவன் கிளம்பி வந்தபோது, அவர் பெரும் கோபத்திலிருந்தார்.



"என்னம்மா... ஏன் அவசரமா வரச் சொன்னீங்க?" என்று கேட்டவனிடம், "உன் பொண்டாட்டியப் போய்க் கேளு! அவ திடீர்னு வாந்தியெடுத்தவுடனே, சந்தோஷமா ஃபோன் போட்டு உன்னை வரச் சொன்னா, அப்படி எதுவும் இல்லேங்கறா! எல்லாம் என் தலையெழுத்து. போய்ச் சேருறதுக்குள்ளே பேரக் குழந்தைகளைப் பாக்குற பாக்கியம் கிடைக்காது போலிருக்கு" என்றார் கோபத்துடன்.



## 11

முகிலனின் முகம் சிவந்து கறுத்து விட்டது. "அம்மா! அதுக்காக அவளை ஏதாவது சொன்னீங்களா?" என்றவனின் குரலில் பெரும் சீற்றம் தெரிவதாய்!

"ஏன்... இந்த வீட்டில் நான் எதுவுமே பேசக்கூடாதுங்கறியா?"

"அப்படிச் சொல்லலைம்மா! இந்த விஷயத்தில் அவ கிட்டப் போகாதீங்க... எல்லாத்துக்கும் நான்தான் காரணம்! இப்பக் குழந்தை வேணாம். கொஞ்ச நாள் சந்தோஷமா இருக்கலாம்னு நான்தான் தள்ளிப் போட்டிருக்கேன்."

அவன் கூறியது படிகளில் இறங்கி வந்து கொண்டிருந்த மிருணாவின் காதுகளில் ஸ்பஷ்டமாக விழுந்தது.

பனிச்சிற்பமாய் சிறிது நேரம் உறைந்து நின்றிருந்தவளை, அருகில் வந்திருந்த முகிலனின் குரல் கலைத்தது.

"வா... சாப்பிட்டுட்டு டிரெஸ் மாத்திக்கிட்டுக் கிளம்பு... அம்மா பேசினதிலே மூட்-அவுட் ஆகியிருப்பே... நம்ம திராட்சைத் தோட்டத்தை நீ பார்த்ததே இல்லை தானே!

போயிட்டு வரலாம்!" என்றபடி அவளை அழைக்க, மௌனமாக அவனைப் பின் தொடர்ந்தாள் அவள்.

இருவரும் கிளம்பிச் சென்றதும், தன் மனைவியை அழைத்தார் சுந்தரபாண்டியன்.

"தமிழரசி! நானும் உன்னை கவனிச்சிட்டுத்தான் இருக்கேன். நீ, பணக்கார வீட்டிலிருந்து மருமக வரணும்னு ஆசைப்பட்டிருந்தேன்னா, அதை உறுதியா நின்னு சாதிக்கக் காட்டியிருக்கணும். மகனுக்காகன்னு விட்டுக் கொடுத்து, அந்தப் பொண்ணை நாமளே பாத்து முடிச்சி வச்சிட்டு, இப்ப அவளை எதுக்கெடுத்தாலும் குத்தம் சொல்றது நல்லாயில்லை!

"அன்னிக்கும் அப்படித்தான்... ஒண்ணுமில்லாதவன்னு குத்திக் காட்டினே! நான் கேட்டுட்டுதான் இருந்தேன். அந்தப் பண விஷயத்திலேயும் தப்பா முடிவெடுத்துப் பேசிட்டே... இன்னிக்கு அந்தப் பொண்ணுக்கு ஏதோ அஜீரணம் போலிருக்கு! அதான் வாந்தி எடுத்திருக்கு. உடனே, அதையும் அவ மனசு நோகற மாதிரிப் பேசிட்டே!

"முகிலன் வருத்தப்பட மாட்டானா? அவன் சந்தோஷமா இருக்கணும்னு நினைச்சிக் கல்யாணம் செஞ்சு வச்சிட்டு, இப்ப நீ அந்தப் பொண்ணை வார்த்தைகளாலக் குத்திக் கிழிச்சேன்னா, அதோட காயமெல்லாம் உன் மகனோட மனசுலதான் ஆழமாய்ப் பதிஞ்சு பெரிய வடுவாயிடும்.

"இதுவே உன் பொண்ணா இருந்தா எப்படி நடந்துப்பே? யோசிச்சுப் பாரு! உன்னைக் குறை சொல்றதா நினைக்காதே... அதான் நான் ஆரம்பத்துல இருந்தே உன்னை எதுவும் கேக்காம பேசாம இருந்தேன். மருமக வந்தாலே, மகன்



தன்னை மதிக்க மாட்டானோ... மனைவியால விலகிப் பிரிஞ்சு போயிடுவானோன்னு எல்லா அம்மாக்களும் பயப்படறீங்க!

"ஆனா, நீங்களும் ஒரு காலத்துல மருமகதான்கிறதை ஏனோ மறந்துடறீங்க! யோசிச்சுப் பாரு... நான் சொல்றதுல இருக்கிற நியாயம் புரியும். நாம அவகிட்டப் பெத்தவங்க மாதிரி நடந்துக்கிட்டா, அவளும் நம்மகிட்டே மகளா நடந்துக்கப் போறாங்கிற உண்மை, பல பெண்களுக்குப் புரியறதில்லை" என்று கூறிவிட்டு அவர் வெளியில் கிளம்பிச் சென்றார். தமிழரசியின் மனதில் அவருடைய வார்த்தைகள் ஆழமாகப் பதிந்து, மனதில் சிறிதாய் ஒரு மாற்றம் வர ஆரம்பித்தது.

* * *

திராட்சைத் தோட்டத்திற்குச் சென்று, கொடிகள் நிறைந்த பந்தலுக்கடியில், தலையைத் தாழ்த்தியபடி முகிலனுடன் இணைந்து நடந்தபோது, விழிகளின் அருகினில் விரிந்த வானமாய் தெரிந்த பசுமையான திராட்சைப் பந்தல்கள் அவள் மனதை வருடி இதப்படுத்தின.

விழிச் சிரிப்பிற்குள் தெரிகின்ற கருப்பு முத்துக்களாய் தொங்கிய அந்த அழகான திராட்சைக் கொத்துக்கள் இதயத்தை அள்ளத் திரும்பினாள்.

யாருக்கும் தெரியாமல் ஓரவிழிகளால் ரகசியமாய் அவளை உரசிக் கொண்டிருந்த முகிலனின் பார்வையுடைய மன ஈர்ப்பு சக்தி, அவளை தடுமாறச் செய்வதாய்!

ஆனால், இன்றுதான் புதிதாகப் பிறந்ததைப் போல் நெஞ்சுக்குள் ஒரு புத்துணர்வு!

முகிலனின் மனத்திற்குள் இதுவரை நங்கூரம் பாய்ச்சி யிருந்த வேதனை, சட்டென்று அவள் வார்த்தைகளால் விடுபட்டு வெளிச் சென்றது.

நிஜரென்று, அவனைச் சுற்றிலும் கோடி மலர்கள் ஒரே சமயத்தில் மலர்ந்ததைப் போல் ஒரு உணர்வு.

அடுத்த நொடி, முகிலனின் கைகளுக்குள் இறுக்கமாக சிறைப்படுத்தப் பட்டிருந்தாள், மிருணாளினி!

''மிருணி...!''

நாபியிலிருந்து எழுந்த அழைப்புடன் அவளை முத்த மிட்டபோது, வெகு நாட்கள் காத்திருந்த தவிப்பும் வேகமும், அவனுடைய ஒவ்வொரு செயல்களிலும் தெரிவதாய்!

வெட்கத்தின் ரேகைகள் அவள் உடலெங்கும் விரவிப் பரவ, அங்கு இனிய உணர்வுகளின் சங்கமம்!

காட்டாற்று வெள்ளம் கரைபுரண்டு மெல்லிய சிற் றோடையைத் தனதாக்கியதைப் போல்!

மெலிதாய் ஒலித்த கடிகாரத்தின் ஒலியும், சில் வண்டு களின் ரீங்காரமும், வெகு நேரம் கழித்தே, இருவரின் செவிகளிலும் பதிந்தன!

''மிருணி... ரொம்ப முரட்டுத் தனமா நடந்துக்கிட் டேனா... ஸாரிடா'' அவள் காதோரம் முகிலன் முணு முணுத்த போது, இமைக் கதவுகளை மூடியபடிப் படுத்திருந்தவளின் முகத்தில், புதுமணப் பெண்ணின் நாணமும்... மொழி புரியாத இடத்தில் மாட்டிக் கொண்டது போன்ற, புதிதான ஒரு தவிப்பு நிலையும்!



முகிலன், சீறவான ஒரு வேகத்துடன் பேச ஆரம்பித்தான்.

''ரெண்டு வருஷத்துக்கு முன்னே, ஒரு நாள் கோயில் திருவிழால உயிர்ச் சிற்பமா உன்னைப் பாத்தப்ப, 'எனக்கு மனைவின்னு ஒருத்தி இந்த வீட்டுக்கு வர முடியும்னா அது நீதான்'னு நான் முடிவு பண்ணினேன் மிருணி...

''ஆனா, நீ ரொம்ப சின்னப் பொண்ணாச்சேன்னு ஒரு பயம் வந்தது. அப்படியும் ஒன்றரை வருஷம் காத்திருந் தேன். அதுக்கு மேல காத்திருக்க முடியாம, மனசுக்குள்ளே பெரும் தவிப்பு! அம்மா வேற கல்யாணத்துக்கு ரொம்ப நெருக்க ஆரம்பிச்சாங்க... அப்புறம் தான் அப்பா அம்மா கிட்டே பேசி, நம்ம கல்யாணத்தை முடிவு பண்ணச் சொன்னேன்.

''நீ பக்குவப்படாத சின்னப் பொண்ணாச்சே... பயப் படறியே... கொஞ்சம் மெச்சூரிட்டி வரட்டும்னுதான் ஒதுங்கி இருந்தேனே தவிர... நீ என்னை விரும்பாமத் தான் கல்யாணத்துக்கு ஒத்துக்கிட்டேன்னு சத்தியமா எனக்குத் தெரியாது.

''தெரிஞ்சிருந்தா, நான் இதை நிச்சயமாத் தவிர்த் திருப்பேன்...''

அவனுடைய உதடுகள், அவளின் வெண்பஞ்சு விரல் களால் மெதுவாக மூடப்பட்டன.

''ப்ளீஸ்...'' அவள் குரலில் பெரும் பரிதவிப்பு!

ஒவ்வொரு விரல் நுனியையும் மென்மையாக முத் மிட்டவன்... ''அன்னிக்கு உன் வீட்டுத் தோட்டத் பூவாட்டம் நீ சிரிச்சப்ப... எனக்கு என்ன பிடிக்கும்னு தெ

டப்ப... கோவில்லே சக்தி வந்து என்னைப் பாத்தவுடனே மிரண்டு விழிச்சப்ப... இப்படி நிறைய நேரங்கள்லே, நான் முதன் முதலா ஒரு பொண்ணுக்காக என்னையே தொலைச்சு நின்னிருக்கேன்." கிசுகிசுப்பான குரலில் கூறினான்.

உடனே எம்பி அவன் கன்னத்தில் அழுத்தமாய் தன் இதழ் பதித்தவள், "நானும்தான் முகில்... நீங்க என்னைப் புரிஞ்சு நடந்துக்கிட்ட விதம், என்னை ரொம்பத் தாக்கிடுச்சு. நீங்க மேற்கோள் காட்டிய புத்தக வரிகள், உங்களை ஒரு உயர்ந்த சிந்தனையாளரா எனக்கு அடையாளம் காட்டுச்சு. ரொம்ப நல்லவரா நீங்க இருந்தது, என்னை முழுசா ஆக்கிரமிக்க ஆரம்பிக்க, எனக்காக என் குடும்பத்து மேல நீங்க காட்டின அக்கறை என்னை நெகிழ வச்சிது.

"எல்லாத்துக்கும் மேல என்னோட உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுத்து என்னைக் காயம் படாம நீங்க பாத்துக்கிட்டது... உங்களுக்குள்ளே இருந்த மனித நேயம்... ரசனைகள் எல்லாமே என்னைத் தலைகீழாப் புரட்டிப் போட்டுடுச்சி.

ஒரு ஆணுக்கு அழகே அவனுடைய கம்பீரமும், நல்ல மனசும்தான்னு புரிஞ்சுக்கிட்டேன்."

அவனுடைய வார்த்தைகள் ஒவ்வொன்றும் அவனுக்குள் மலையருவியின் சலசலப்பாய்... சில்லென்ற பனிக் காற்றின் வருடலாய்... தேன் மலர்களின் தேவ நிசப்தமான மலர்வாய்... சிலிர்க்கச் செய்தன.

"இன்னும் பத்தே நாளிலே உனக்குப் பரீட்சை வருது. ஞாபகம் இருக்கா? ஆனா, வாழ்க்கைப் பாடத்துலேயே பாஸாயிட்டே... அதென்ன பெரிய கஷ்டமா?



முகிலன் குறும்புடன் கேட்க, அவன் மார்பில் நாணத்துடன் முகம் புதைத்தாள் மிருணி!

ஒற்றை விரலால் அவள் முகத்தை மெல்ல நிமிர்த்தியவன், அவளின் பவள இதழ்களைத் தன் சீதனமாக எடுத்துக் கொண்டான்.

தூரத்தே தெரிந்த திராட்சைத் தோட்டத்தின் மடியில் இளைப்பாறிக் கொண்டிருந்த வண்டுகள், மதுவுண்டதால் மௌனமாகச் சோம்பி இருந்தன.

பூமிக்கு எழுதிய காதல் கடிதங்களை, மரங்கள் மலர்களாய் உதிர்த்துக் கொண்டிருந்தன.